නාවෙලි
NAAVELI
# நாவெளி
நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව
NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E- MAGAZINE

www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333

மலர்: 17 ✦ இதழ்: 37 ✦ 2025ஆம் வருடம் ✦ வைகாசி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி





பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 12



முன்னிலை பெறும் பெண்கள் அணி 13



சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுத்தல் 14



முத்தமிழ் வித்தகருக்கு நூற்றாண்டு விழா 15

| | |
|---|---|
| அபிவிருத்திப் பாதையில் | 04 |
| பொருண்மியம் | 06 |
| கதைச்சாரம் | 08 |
| தேகாரோக்கியம் | 10 |
| முதலாம் பக்கத்தொடர் | 12 |
| பெண்ணியம் | 32 |
| அறிவுக் களஞ்சியம் | 18 |
| மாணவர் அரங்கம் | 20 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 21 |
| சட்டம் | 22 |
| மானுடம் | 24 |
| சுற்றுச்சூழல் | 26 |
| கவிதைச்சாரல் | 29 |
| சமூகம் | 32 |
| மருத்துவமும் நாமும் | 34 |
| குதம்பம் | 35 |
| படலையைத் தேடி | 36 |

# ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 17 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. ஒரு வருடம் கடந்த நிலையில், இவ்வருடத்தின் ஐந்தாவது மலராக பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 17 இம்மாதமும் உங்களுக்காக வெளிவருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" இன் சொந்தங்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு தொலைதூரக் காடு, தள்ளியிருக்கும் கடல் அல்லது விடுமுறையைக் கழிக்க நாம் சென்று பார்வையிட்ட ஒரு மலை போன்ற இயற்கை சூழல்களை நம்மிடமிருந்து பிரிந்து நிற்கின்ற இடங்களாகவே நாம் நினைத்துக்கொண்டு பேசுகின்றோம். ஆனால் இந்தப் பிரிவினை ஒரு மாயை. நாமே இயற்கை, இயற்கையே நாம். நாம் உள்ளெடுக்கும் ஒவ்வொரு சுவாசமும், நாம் அருந்தும் ஒவ்வொரு துளி நீரும், நாம் உண்ணும் ஒவ்வொரு உணவும் நமது கிரகத்தை நிலைநிறுத்தும் பரந்த வாழ்க்கை வலையமைப்போடு நம்மை இணைக்கிறது.

ஆனால், இந்த இணைப்புகளை நாம் முன்பை விட வேகமாக அழித்து வருகிறோம். ஒவ்வொரு நாளும், சுமார் 137 வகையான தாவரங்கள், விலங்குகள் மற்றும் பூச்சிகளை நாம் அழித்து வருகிறோம். காடுகள் நிமிடத்திற்கு 27 கால்பந்து மைதானங்கள் என்ற விகிதத்தில் மறைந்து வருகின்றன. நமது பெருங்கடல்கள் பிளாஸ்டிக்கால் நிரப்பப்படுகின்றன, நமது காற்று மண்டலம் மாசுபாட்டின் காரணமாக அடர்த்தியாகிறது, மேலும் நாம் வாழும் மண், உயிர் வாழ்க்கையை ஆதரிக்கும் திறனை இழக்கின்றது. இவை வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல - அவை எச்சரிக்கை ஒலி எழுப்பும் மணிகள்.

நீங்கள் கடைசியாக ஒரு காட்டில் நின்றதையோ, பறவைகள் பாடுவதைக் கேட்டதையோ, அல்லது கரையில் அலைகள் மோதுவதைப் பார்த்ததையோ பற்றி யோசித்துப் பாருங்கள். நீங்கள் அனுபவித்த அமைதி மற்றும் இணைப்பு உணர்வு வெறும் உணர்ச்சி பூர்வமானது மட்டுமல்ல - அது உயிரியல் ரீதியானது. இயற்கையில் நேரம் செலவிடுவது மன அழுத்தத்தைக் குறைக்கின்றது, மன ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது, மேலும் நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இயற்கையைப் பாதுகாக்கும்போது, நம்மை நாமே பாதுகாத்துக் கொள்கிறோம் என்பது உண்மைதானே!

ஆனால் பாதுகாப்பு என்பது தேசிய பூங்காக்களை உருவாக்குவது அல்லது அழிந்து வரும் உயிரினங்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல. இது சிறிய, தினசரி நடவடிக்கைகளுடன் தொடங்குகிறது. குறைந்த பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துதல், பொதுப் போக்குவரத்தைத் தேர்ந்தெடுத்தல், உள்ளூர் விவசாயிகளை ஆதரிப்பது, அறையை விட்டு வெளியேறும்போது விளக்குகளை அணைப்பது - போன்ற இந்த செயல்கள் முக்கியம் வாய்ந்தவை. நாம் இவ்வாறான செயல்களைச் செய்யும்போது அவை தாங்கி வரும் மன அலைகள் வெளிப்புறமாக அலைபாய்ந்து மற்றவர்களையும் அவ்வாறு செய்ய ஊக்குவிக்கின்றன. இதன் மூலம் மாற்றம் உருவாக்கப்படுகின்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கிறது என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் இந்தக் கண்ணோட்டம் குறுகிய பார்வை கொண்டது. பயிர்களின் மகரந்தச் சேர்க்கை முதல் நீர் சுத்திகரிப்பு வரை, கார்பன் சேமிப்பு முதல் வெள்ளக் கட்டுப்பாடு வரை - இயற்கை ஆண்டுதோறும் டிரில்லியன் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள சேவைகளை நமக்கு வழங்குகிறது. குறுகிய கால ஆதாயத்திற்காக இந்த இயற்கை அமைப்புகளை அழிப்பது, ஒரு சொற்ப சந்தோசத்தை அனுபவித்திட வேண்டுமென்பதற்காக நீங்கள் குடியிருக்கும் வீட்டை எரிப்பது போன்றதேயாகும்.

இப்போதைய காலகட்டத்தில் நாம் சூழல் பாதுகாப்பு பற்றிய ஒரு முக்கிய தருணத்தில் நிற்கிறோம் என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். ஆனால், இயற்கை என்பது சுரண்டப்படுவதற்கான ஒரு முடிவற்ற வளம் என நாம் கருதிக் கொண்டிருப்பது மிக மிக அபத்தமானது. அதை நம் இருப்பின் அடித்தளமாக நாம் அங்கீகரிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நம்மை தவிக்கச் செய்யலாம். இயற்கையைப் பாதுகாப்பது நாம் உயிர்வாழ்வதற்கான அவசியமான அடித்தளம் என்பதை சகலரும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

என்றும் அன்புடன்
ஆசிரியர்.



# வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ஆடு வழங்கல் தொடர்பான மீள் பார்வை

## ஆடு வளர்ப்பும் நாவிதன்வெளி பிரதேசமும்




நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவானது பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இம் மக்களுக்கு விவசாயம், கால்நடை வளங்கள் அமைச்சின் ஊடாகவும் அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் ஆடுகள் வழங்கி அவர்களின் நிரந்தர வருமானத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் உதவிகள் மூலமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வருமானம் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆனாலும் தற்போதும் இப் பிரதேசத்தில் வாழ்வாதாரத் தேவை காணப்படவே செய்கின்றது.


குறைந்த வருமானம் பெறும் மக்களுக்குக்கான வாழ்வாதார உதவி வழங்கும் பொருட்டு மக்களின் உதவி தேவைப்படும் தன்மையினை உறுதிப்படுத்தும் கள ஆய்வு அறிக்கையின் படி பெயர்ப்பட்டியல் தெரிவு செய்யப்பட்டு அப் பெயர்ப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2021ஆம் ஆண்டிலிருந்து விவசாயம், கால்நடைவளங்கள் அமைச்சின் ஊடாக தற்போது வரை தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதைவிட வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு 2022ஆம் ஆண்டு நிதி அமைச்சின் வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் இரு தடவைகளில் 03 மில்லியன், 04 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுகளில் ஆடுகள் வழங்கப்பட்டதோடு, கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினாலும் 2022 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.


நாவிதன்வெளி பிரதேசத்திற்குட்பட்ட வாழ்வாதார உதவி தேவைப்படும் மக்களுக்கான விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சினால் ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ஆடுகள் தொடர்பான மீள் பார்வையானது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.





**2022ம் ஆண்டு நிதி அமைச்சின் 03 மில்லியன் வேலைத்திட்டத்தில் வாழ்வாதார உதவித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடுகள் தொடர்பான மீள்பார்வையானது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.**





**2022ஆம் ஆண்டு நிதி அமைச்சின் 04 மில்லியன் வேலைத்திட்டத்தில் வாழ்வாதார உதவித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடுகள் தொடர்பான மீள்பார்வையானது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.**




**மேலும் 2022ஆம் ஆண்டு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்பட்ட ஆடுகள் தொடர்பான மீள்பார்வையானது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.**




**அத்தோடு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஆடுவளர்ப்பு பயனாளிகளுக்கு 2022 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் "Stud Goat" உம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான மீள்பார்வையானது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.**




**இவ்வாறு வழங்கப்படும் வாழ்வாதார உதவித்திட்டங்கள் எமது பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதோடு பிரதேச அபிவிருத்தியிலும் பெரும் பங்கை வகித்து வருகின்றமை நோக்கத்தக்கது.**

**தொகுப்பு :**

**Mrs. Gajenthini Manivanan - Development Officer.**

**(Under the Guidance of Mrs.T.Kirupairajah, Deputy Director of Planning)**



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் – 2025–2029

## 03. நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

### 3.1 நிகழ்ச்சித் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம்

“ஒருங்கிணைந்த அபிவிருத்தி அணுகுமுறை மூலம் கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் வறுமையை ஒழித்தல்”

### 3.2 செயற்திட்டத்தின் நிலையான நோக்கங்கள்

- சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்கு கிராமப்புற குடும்பங்கள்/ சமுதாயங்களின் வருமான மட்டத்தினை உயர்த்துதல்.
- நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துதல்.
- சமூக அபிவிருத்தியினூடாக சமூகப் பிரச்சினை யினையைக் குறைத்தல்.
- அடிப்படை வசதிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் அணுகலை மேம்படுத்துதல்.
- நிலைபேறான அபிவிருத்திக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

## 04. இலக்கிடப்பட்ட பயனாளிகள்.

- கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள வறிய ஒதுக்கப்பட்ட (Vulnerable Groups) மற்றும் பின்தங்கிய குழுக்கள் (Under Poverty line Groups) உட்பட சகல மக்களும்.

## 05. பெறுபேறுகள்.

- பிரதேசத்தில் உள்ள வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துதல்.
- கிராமியப் பொருளாதார மேம்படுத்தலும், வருமான அதிகரிப்பும்.
- உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல்கள் மேம்படுத்துதல்.
- தொழில் முயற்சி ஆற்றல்கள் விருத்தியடைதல்.
- அபிவிருத்தித் திட்டத்தில் வலுவூட்டப்பட்ட மக்களின் செயலூக்கமான பங்களிப்பினை அதிகரித்தல்.

## 06. வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் அதிகாரப் பிரதேசம்

- தீவிலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள். அதாவது இலங்கையிலுள்ள 330 பிரதேச செயலகப்





பிரிவுகளிலிருந்து தலா 03 கிராம சேவகர் பிரிவுகள் வீதம் மொத்தமாக 990 கிராம சேவகர் பிரிவுகளில் முதற்கட்டமாக திட்டம் நடைமுறைப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து 60 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்படவுள்ளன. அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் மத்திய முகாம்-02, மத்திய முகாம் - 06 மற்றும் சாளம்பைக்கேணி - 05 ஆகிய 03 கிராம சேவகர் பிரிவுகள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## 07. வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் முக்கியமான துறைகள்.

### *7.1* வாழ்வாதாரம் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி

### *7.1.1* குழுக்கள் மற்றும் கிராமங்கள் ரீதியாக புதிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திக்கு வசதிகளை வழங்குதல்.

கிராமங்களில் காணப்படும் உற்பத்தித் திறன், வளங்களின் அரிய நிலை, சந்தை மற்றும் மனித வளங்களைக் கருத்திற் கொண்டு குழுக்கள் மற்றும் கிராமங்கள் என்ற ரீதியில் புதிய தொழில் முயற்சியாளர்களைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு புதுமையான தயாரிப்புகள், இறக்குமதி மாற்றீடுகள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த கேள்வியுடன் அதிக விலையுயர்ந்த பொருள்கள் (உதாரணம் சுற்றுலாத் துறை தொடர்பான பொருள்கள்) போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு அரசாங்கத்தால் நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குவதற்கும், சந்தை வாய்ப்புக்களினை விரிவுபடுத்துவதற்கும், பிற நிறுவனங்களின் உதவியினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### *7.1.2* தற்போதுள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் மற்றும் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.

தற்போதுள்ள கிராமிய தொழில் முயற்சியாளர்களை குழுக்கள் அல்லது கிராமங்களாக மேலும் பயன்படுத்துவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக மிகவும் பரவலான சந்தை வாய்ப்புகளை (உள்ளூர் மற்றும் சர்வதேச) உருவாக்குவதற்கும், பொருள்களின் தரத்தினை அதிகரிப்பதற்கும் வேலை வாய்ப்புகளை விரிவாக்கல் செய்தல் உட்பட வருமான நிலையினை உயர்த்துவதன் ஊடாக பொருளாதார ரீதியில் கிராமிய மக்களை வலுவூட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

M.I. Aliyar
Development Officer.
Divisional Secretariat , Navithanveli

# "மறக்க முடியாத நாள்"



## சிறுகதை

நி . நிருக்ஷன் - வீரமுனை

நான் சாலை ஓரமாக நடந்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென வானம் கறுத்தது. காற்று பலமாக வீசியது. சில நிமிடங்களில் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. அப்போது அருகிலிருந்த கடையினுள் ஒதுங்கி முகத்தில் விழுந்த மழைத்துளியைத் துடைத்தேன். கையில் அம்மாவுக்கு காய்சலுக்காக வாங்கிய ஊறல் பக்கற்றுடன் மணிக்கணக்காக நின்று கொண்டிருக்கையில் அம்மா அவதிப்படுவாள் என்று என் மனம் அங்கலாய்க்கும் வேளையில், நான் மழைக்காக ஒதுக்கி நிற்கும் கடைக்குள் வந்தாள் ஓர் அழகி.

அவளது கண்களோ ராமனது வில்லைப் போல் வளைந்த புருவத்துடன் கயல் மீனைப்போன்று அழகாக இருந்தன. அந்த கண்களுக்கு மேல் பிறையொத்த நெற்றி இவற்றை தாங்குவதற்கு ஒரு முழு நிலவை ஒத்த முகம். அதில் சிவந்த கொவ்வைப் பழத்தை விஞ்சிய வாயினால் "அண்ணா சொக்லட் ஐஸ்பழம் இருக்கா" என்று குயிலின் குரலை ஒத்த இனிமையான குரலால் கடை முதலாளியிடம் கேட்டாள். அவரோ "இல்லை" என்று பதிலளித்தார். ஐஸ்கிறீம் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்துடன் திரும்பிய அவளின் பார்வை என்னில் பட்டது. "எங்கு நீங்கள் போகப்போறீங்கள்" எனக் கேட்டாள். தேவதை போன்ற அவள் என்னோடு பேசுகிறாள் என்றவுடன் அவளருகில் விரைந்து சென்றேன்.

"ஹலோ என்ன பதிலே சொல்லாமல் பிறிஜ்சினுள் வைத்த நீரைப் போல் உறைந்திருக்கிறாய் என்றாள்" தயக்கத்துடன் நின்ற நான் குளிரில்; நடுங்கிய படி "வீடு செல்லப் போகிறேன்" என்று பதிலளிக்க அவளோ மீண்டும் "எங்கே உங்களது வீடு உள்ளது" என்றாள் அதற்கு "விஷ்ணு கோயிலடியில் இருக்கிற முதலாவது வீடுதான்" என்று பதிலளித்தேன். அதற்கு அவளோ "நான் செல்லும் வழிதான், வா என் குடைக்குள் கொண்டு விடுகிறேன்" என்று கூறி அவளது கையிலிருந்த வர்ணக் குடையை விரித்து குடைக்குள் வருமாறு அவளது முகபாவனையால் என்னை மீண்டும் மீண்டும் அழைத்தாள்.

தயங்கியபடி நின்ற நானோ மெதுவாக ஒரு காலை எடுத்து வைத்த அதே நொடி மழையும் அதிகமாக பெய்யத் தொடங்கியது. நொடியும் நான் தாமதிக்காமல்; விரைந்து குடைக்குள் இணைந்து கொண்டேன். இருவரும் நடக்க ஆரம்பித்தோம். என்ன மாயமோ தெரியவில்லை எனது வீட்டின் தூரம் பலமடங்கு குறைந்தால் போல் தோன்றியது. அந்த நொடி அவள் "என்ன எதுவுமே பேசாமல் வாரீர்" என்று பேசிய படியே "எனது பெயர் வர்ஷா உன் பெயர் என்ன?" என்று கேட்டாள். முதல் முறையாக பெண்ணோடு எதிர்பாராமல் குடைக்குள் ஒன்றாக வந்ததாலோ தெரியவில்லை ஒரே நடுக்கமாகவே இருந்தது. நடுங்கிய குரலால் "ஹரித்" என எனது பெயரை மெதுவாகச் சொன்னேன். அதே நொடி மழையும் சட்டென நின்றதுடன் எனது வீடும் வந்தது. நான் அந்த பெண்ணிடம், உனது வீடு எங்குள்ளது? என்று கேட்க முனைந்தேன். அதே நொடி எனது அக்கா படலையின் வாயிலில் குடையுடன் நின்று "எவ்வளவு நேரம்டா நீ போய், என்னடா செய்தாய்" என்று கூறி என்னை அழைத்துச் சென்று விட்டாள்.

இரவு படுக்கைக்குச்சென்றேன். கண்கள் முழுவதும் அவளின் அழகும் வார்த்தையின் இனிமையுமே நிறைந்திருந்தன. "அவள் இங்கு புதிதாக குடிவந்திருப்பாளோ? ஏன் இன்னும் என் கண்களில் இவள் படவில்லை. ஆகா! என்ன ஓர் அழகு" என எனது எண்ணம் முழுவதும் அவளின் வண்ணங்களாகவே இருந்தன. என்றுமில்லாத ஒரு வகை உணர்வு என்னுள் துளிர் விட்டது. வர்ஷாவின் வீடு

எங்குள்ளது? என்று கேட்கவில்லையே என்ற எண்ணம் மனதிற்குள் திரும்பத்திரும்ப வரவே, தூக்கம் வராமலே அந்த இரவுப் பொழுது அவள் நினைவுகளுடனே கழிந்தது.

மறுநாள் காலை எனது பழுதடைந்த சைக்கிளைத் திருத்துவதற்காக, முதலாவது ஆளாக சைக்கிள் திருத்தும் கடைக்குச் சென்று அதனைத் திருத்திய உடனே, அவள் சென்ற திசையிலுள்ள வீதிகள் எல்லாவற்றிலும் அவளை தேடினேன். அவளைக் காணவேயில்லை. காலை 11.00 மணியாகியும் அவள் கண்ணில் பட்டபாடில்லை. நான் காலைச்சாப்பாடு சாப்பிடாததால் பசி வயிற்றைத்தூண்ட களைப்படைந்து வீடு திரும்பினேன்.

நாட்கள் சில கடந்தன. நான் பாடசாலையில் கடைசி வரிசையில் தனியாக அமர்ந்திருந்தேன். கணிதப்பாட ஆசிரியர் பாடம் படிப்பித்துக் கொண்டிருந்தார். தற்செயலாக அதிபரது காரியாலயத்தைப் பார்த்த போது, ஓர் ஆணும் வர்ஷாவும் நின்று கொண்டிருந்தனர். இரு கண்களையும் கசக்கிவிட்டு திரும்பவும் உற்றுப் பார்த்தேன். ஒரு மாற்றமும் இல்லை அவளேதான். இடைவேளை மணியடித்தது. நல்ல சகுனந்தான் என்று எண்ணி திரும்பினேன். நண்பன் வழமைபோல் சாப்பிட அழைத்தான். “இல்லடா பசிக்கல்லை நீ சாப்பிடு, கோபிக்காதடா” என்று கூறிவிட்டு அவசர அவசரமாக வர்ஷாவிடம் சென்றேன். “ஆ.. ஹரித் என்று என்னைக் கண்டவுடன் கூறி அழைத்தாள். பிறகு அவள் “அப்பா, இவன் தான் எனது நண்பன் ஹரித், நாம் இருக்கும் வழியில்தான் இருக்கிறான்” என்று என்னை அறிமுகப்படுத்தியதும் வந்திருப்பது அவளது தந்தை என்பதை அறிந்தேன். அன்று எனக்கு வந்த நடுக்கம் இன்றும் மறக்கவில்லை.


அவள் வந்த விடயத்தை அறிய மனமும் விடவில்லை. கொஞ்சம் துணிவுடன் என்ன இங்கு வந்திருக்கீங்க? என்றேன். நான் இந்த பாடசாலையில் புதிதாக தரம் 10இல் சேர்ந்துள்ளேன் என்றாள். அவள் என்னைவிட ஒருவயது இளையவள் என்ற மகிழ்ச்சி. ஆனாலும் அவளது வகுப்பு சற்று தூரமாக இருக்கிறதே என்ற கவலை உடனே எனக்குள் வந்து போனது.

பாடசாலை விட்டதும் அவளின் வருகைக்காக காத்திருந்தேன். ஆனால் முன்னரே அவள் சென்றதை அறிந்து, நான் ஏமாற்றத்துடன் விடு திரும்பி, உணவை உண்ட மறுவேளை, ஐஸ்பழம் வாங்கிய அந்த கடையிலேயே பகல் 2.00 மணியிலிருந்து அவளின் வருகைக்காக காத்திருந்தேன். இன்று அவள் எப்படியும் வந்தே ஆகவேண்டும். ஏனெனில் அவ்விடத்தால்தான் அவள் பிரத்தியேக வகுப்பிற்கு செல்ல வேண்டுமென்பது எனது கணிப்பு.

அவள் வருவது தொலைவில் தெரிந்தது. வருவது அவள்தானா என்பதை உறுதி செய்து கொண்டேன். இன்று அவள் மஞ்சள் நிறச் சல்வார் அணிந்திருந்தாள். அழகு வதனம், இரத்தச் சிவப்பு உதடு. நீண்ட கூந்தலை ஒற்றைச் சடையாகப் பின்னியிருந்தாள். தூறல் மழைக்கு அதே வர்ணக்குடை. தனியாகத்தான் வருகிறாள். இன்று எப்படியாவது அவளின் தொலைபேசி இலக்கத்தை வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் காத்திருந்தேன். அவளின் வருகை என்னை நெருங்க நெருங்க எனது இதயத் துடிப்பு படபடத்தது. என்னையும் நாணம் கௌவிக் கொண்டதை என்னால் உணர முடிந்தது. அவள் சற்று தொலைவில் என்னை கண்டு விட்டாள், என்பதை உணர்ந்து அவள் அன்று கேட்ட சொக்லட் ஐஸ்பழம் இன்று கடையில் உள்ளதனால் அதை வாங்கி கையிலேந்தியபடி தெரியாதது போல் முகத்தை திருப்பி உணர்வுகளை அவள் பக்கம் வைத்து காத்திருந்தேன்.

தூரத்திலிருந்தவாறே ஹாய்... ஹரித்... ஹரித்... என அழைத்தவாறே வந்தாள். நானும் சாதாரணமாகத் திரும்புவது போல் மெல்லத் திரும்பிப் பார்த்தேன். அவள் பாதையைக் கடந்து என் பக்கம் வர முனைந்தவிடத்து, மண் ஏற்றிக்கொண்டு வேகமாக வந்த லொறி ஒன்று அவளை மோதியது. மோதிய வேகத்தில் தூக்கி வீசப்பட்டவள், என் காலடியில் வந்து விழுந்தாள். அவளை மோதிய அந்த லொறிக்காரன், ஈவிரக்கமின்றி நில்லாது ஓடிவிட்டான். அவள் இரத்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தாள், என் உடைவரை இரத்தத்துளி வீசப்பட்டிருந்தது. நான் திகைத்துப்போய் நின்றேன். அவள் உடலில் எந்தவித அசைவும் இல்லை. அவளது இரத்தம் பட்டு என் கைகளிலிருந்த அவளுக்கான ஐஸ்பழம் உருகி வழிந்தது. என் கண்களில் கண்ணீர் மல்க திகைத்துப்போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவள் என்னைப் பார்க்காமல் கண்ணை மூடிவிட்டாள். வானம் இடி இடித்தது, மழை மண்ணில் பொழிந்தது, என் கண்களும் குளங்களாயின.

-முற்றும்-



# நாட்பட்ட தொற்றா நோய்கள்

# இலங்கை எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடி

## (Chronic Non-Communicable Diseases)

தொற்றா நோய்கள் என்பது (Non-Communicable Diseases - NCDs) தொற்று மூலம் பரவாத நோய்களாகும். தொற்றா நோய்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

திடீர் தொற்றா நோய்கள் (Acute NCDs) இவை திடீரென ஏற்படும் காயங்கள் மற்றும் சாலை விபத்துக்கள் (Road Traffic Accidents - RTA) காரணமாக ஏற்படுகின்றன.

நீண்டகால/ நாட்பட்ட தொற்றா நோய்கள் (Chronic NCDs) இவை நீண்ட காலம் நீடிக்கும் நோய்களாகும். நீரிழிவு நோய் (Diabetes Mellitus - DM), உயர் இரத்த அழுத்தம் (Hypertension - HTN), இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்தல் (Dyslipidemia), நாட்பட்ட சிறுநீரக நோய் (Chronic Kidney Disease - CKD), இதய நோய்கள் (Ischemic Heart Disease - IHD, புற்றுநோய்கள் (Cancer) மற்றும் நாட்பட்ட சுவாச நோய்கள் (Chronic Respiratory Diseases - CRD) போன்றவை இதில் அடங்கும்.

இவை தவிர கண் நோய்கள், காது கேளாமை, நாட்பட்ட ஈரல் நோய்கள், மற்றும் நரம்பியல் கோளாறுகள் போன்றவையும் நாட்பட்ட தொற்றா நோய்களில் அடங்கும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (World Health Organization) கூற்றுப்படி நாட்பட்ட தொற்றா நோய்கள் (Chronic Non-Communicable Diseases - NCDs) உலகளவில் ஏற்படும் இறப்புகளில் 74% காரணமாகின்றன. இதில் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த இறப்புகளில் முக்கால்வாசிக்கு மேல் மற்றும் அகால மரணமடையும் 86% மக்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் வசிக்கிறார்கள். புகையிலை பயன்பாடு (tobacco use), உடல் உழைப்பின்மை (physical inactivity), மது அருந்துதல் (harmful use of alcohol), ஆரோக்கியமற்ற உணவு பழக்கம் (unhealthy diets) மற்றும் காற்று மாசுபாடு (air pollution) ஆகியவையே நாட்பட்ட தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான ஐந்து முக்கிய காரணிகள் ஆகும்.

இலங்கை தற்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்களான தொற்று நோயியல் (epidemiology), சனத்தொகை (demographic), சமூக, பொருளாதாரம் (socioeconomic) மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் ஆகியவை பொதுச் சுகாதாரம் சம்பந்தமான நிலப்பரப்பு வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. தற்காலத்தில் எட்டில் ஓர் இலங்கையர்கள் 60 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்களாக உள்ளதோடு 2041 ஆம் ஆண்டளவில் இவ்விகிதாசாரம் இருமடங்காகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வயது அதிகரிக்கும் போது தொற்றா நோய்களினால் பாதிக்கப்படும் தன்மை அதிகரித்துச் செல்கிறது. விரைவான நகரமயமாக்கம் (urbanization), உலக மயமாக்கல் (globalization), வர்த்தக தாராள மயமாக்கல் (trade liberalization) மற்றும் சனத்தொகை இடமாற்றங்கள் போன்றவை மக்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கு

பல வழிகளில் பங்களித்துள்ளன. அத்துடன் தற்காலத்தில் காணப்படுகின்ற சூழலியல் மாற்றங்கள் நாட்பட்ட தொற்றா நோய்கள் தொடர்பான ஆபத்தானது சகல மக்கள் குழுக்களிலும் அதிகரித்துக் காணப்படக் காரணமாகின்றன.

## இலங்கையில் நாட்பட்ட தொற்றா நோய்களின் நிலை

உள்நாட்டு நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு அறிக்கை (Indoor Morbidity and Mortality Return - IMMR) தரவுகளின்படி இலங்கையில் அரசாங்க மருத்துவமனைகளில் ஏற்பட்ட மொத்த இறப்புகளில் ஏறத்தாழ 50 சதவீதம் இருதய நோய் (cardiovascular disease), புற்றுநோய் (cancer), நாட்பட்ட சுவாச நோய்கள் (chronic respiratory diseases), மற்றும் நீரிழிவு நோய் (diabetes mellitus) போன்ற நாட்பட்ட தொற்றா நோய்களால் ஏற்பட்டவை. 2023ஆம் ஆண்டில் குருதியோட்ட குறை இதய நோயால் (ischemic heart disease) 12.6 சதவீதமும், புற்றுநோயால் 8.6 சதவீதமும், சுவாச நோய்களால் 11.5 சதவீதமும், மூளை இரத்தக் குழாய் நோயால் (Cerebro-vascular disease) 6.8 சதவீதமும், உயர் இரத்த அழுத்த நோயால் 0.9 சதவீதமும், மற்றும் நீரிழிவு நோயால் 0.8 சதவீத இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

2015 ஆம் ஆண்டில் 18-69 வயதுடைய 5188 பேரிடம் நடத்தப்பட்ட STEPS ஆய்வின்படி 40- 69 வயதுடைய இலங்கையர்களில் 9.1% பேருக்கு அடுத்த 10 ஆண்டுகளில் இதய நோய் வருவதற்கான ஆபத்து 30% அல்லது அதற்கும் அதிகமாக உள்ளது. இந்த ஆய்வின்படி நான்கில் ஒரு இலங்கையர் உயர் இரத்த அழுத்தம் அல்லது அதற்கான மருந்துகளை உட்கொள்பவர்களாக உள்ளனர். கிட்டத்தட்ட நான்கில் ஒருவர் உயர் மொத்த கொலஸ்ட்ரால் (Total Cholesterol More than 190 mg/dL) அல்லது அதற்கான மருந்துகளை உட்கொள்பவர்களாக உள்ளனர். மேலும் 7.4% பேர் உயர் இரத்த சர்க்கரை அளவு கொண்டவர்களாக அல்லது அதற்கான மருந்துகளை உட்கொள்பவர்களாக உள்ளனர்.

தொற்றா நோய்களுக்குரிய ஆபத்துக் காரணிகளை மாற்றத் தக்க காரணிகள் (modifiable risk factors), மாற்றமுடியாத காரணிகள் (non-modifiable risk factors) என வகைப்படுத்தலாம். மாற்ற முடியாத காரணிகளுள் வயது, பால், இனம், குடும்ப வரலாறு போன்றன அமைவதுடன் மாற்றத்தக்க காரணிகளுள் புகைத்தல், மதுபான பாவனை ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், உடல் இயக்கமின்மை மற்றும் மன அழுத்தங்கள் போன்றன பிரதான காரணிகளாக அமைகின்றன.

## ஆரோக்கிய வாழ்வு நிலையங்கள் (Healthy Lifestyle Centers - HLCs)

இலங்கையில் அதிகரித்து வரும் நாட்பட்ட தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு ஆரோக்கிய வாழ்வு நிலையங்கள் (Healthy Lifestyle Centers) ஆரம்பிக்கப்பட்டன. இதன் முக்கிய நோக்கம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நாட்பட்ட தொற்றா நோய்களுக்கான ஆபத்து காரணிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து இருதய நோய் (Cardio Vascular Disease - CVD) அபாயம் உள்ளவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிப்பதை உறுதி செய்வதாகும். ஆரோக்கிய வாழ்வு நிலையங்களில் நோயாளிகளின் இருதய நோய் அபாயத்தை மதிப்பிடுவதற்கு உலக சுகாதார அமைப்பு/ சர்வதேச உயர் இரத்த அழுத்த சங்கம் (World Health Organization/International Society of Hypertension) பரிந்துரைத்த முறையைப் பயன்படுத்தி அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

தொடரும்...

DR MBM SILMY (MBBS).
MOIC - PMCU CHENAIKUDIYIRUPPU

முதலாம் பக்கத்தொடர்

# பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2025




பிரதேச அபிவிருத்தி மற்றும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டதுடன் சில பிரச்சினைகளுக்கான முடிவுகள் குறித்த கலந்துரையாடலில் எட்டப்பட்டிருந்தது முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது. அந்தவகையில், நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் 2025ஆம் ஆண்டிற்கான கூட்டமானது பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் திரு.A. ஆதம்பாவா அவர்களின் தலைமையில் 2025 வைகாசி மாதம் 14ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.










குறித்த கலந்துரையாடலில் புதிதாக மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட திட்டங்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள், மற்றும் பொதுமக்களின் பிரச்சினைகள் எனப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.









மேலும், இந்நிகழ்வில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.A. உதுமா லெப்பை அவர்களுடன் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன், உதவி பிரதேச செயலாளர் திரு.பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு.செ. சிவம் ஆகியோரும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், நாவிதன்வெளி பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோத்தர்கள், மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







முதலாம் பக்கத்தொடர்

# முன்னிலை பெறும் பெண்கள் அணி



நாவிதன்வெளிப் பிரதேசப் பிரிவின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் இவ்வருட மாவட்ட விளையாட்டு நிகழ்வுகளில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட றாணமடு பெண்கள் அணி வெற்றியினைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

49ஆவது தேசிய விளையாட்டு விழாவினை முன்னிட்டு அம்பாறை மாவட்ட மட்ட விளையாட்டு விழாவானது சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெண்கள் அணியினர் பல்வேறு விளையாட்டுக்களில் கலந்து கொண்டு சிறப்பான வெற்றிகளைப் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

அந்தவகையில் 2025 சித்திரை மாதம் 26ஆம் திகதி கல்முனையில் நடைபெற்ற கடற்கரை கபடி போட்டி, 2025 வைகாசி மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டி மற்றும் 2025 வைகாசி மாதம் 18ஆம் திகதி அம்பாறையில் இடம்பெற்ற எல்லே போட்டி உள்ளிட்ட நிகழ்வுகளில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட றாணமடு பெண்கள் அணியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர்.



இதேவேளை 2025 சித்திரை 26ஆம் திகதி கல்முனையில் நடைபெற்ற கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி, 2025 வைகாசி மாதம் 13ஆம் திகதி அம்பாறையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டி, 2025 வைகாசி மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற கபடி போட்டி ஆகியவற்றில் இரண்டாமிடத்தையும் தமதாக்கினர்.

திறன் விருத்தியில் முன்னிலையில் திகழும் இவ் அணியினர் எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்ள உள்ளனர் என்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

இத்தகைய மகிழ்சியான செய்தியுடன் பங்குபற்றிய அனைத்து வீராங்கனைகளுக்கும், அத்தகைய வீரப்பெண்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் பயிற்றுவிப்பாளர் திரு.இ. நிரோஜன் அவர்களுக்கும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் பெருமையடைகின்றது.



முதலாம் பக்கத்தொடர்

# சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

பொது மக்களிடம் காணப்படவேண்டிய அத்தியாவசிய சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை ஒன்றினை வெற்றிகரமாக நடாத்தி முடித்திருக்கிறது நாவிதன்வெளி பிரதேச செயலகம்.

அந்தவகையில், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இல.16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் நிதி அனுசரணையில் கடந்த 2025.05.20ஆந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு “நாவெளி” கலாசார மத்திய நிலையத்தில் நடமாடும் சேவை நடாத்தப்பட்டது.

இதன்போது தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், காலங்கடந்த பிறப்புப்பதிவு, உத்தேச வயதுச் சானிறிதழ் வழங்கல், மற்றும் திருமணப் பதிவு போன்ற சேவைகள் இந் நடமாடும் சேவையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பொதுமக்களுக்காக முற்றிலும் இலவசமாக இடம்பெற்றன.

பொது மக்களுக்கான இப்பாரிய சேவையினை வழங்குவதற்காக, கிழக்கு வலயத்தின் பிரதிப் பதிவாளர் நாயகம் திரு.மு.நடராஜா அவர்கள் மற்றும் கிழக்கு வலயத்தின் பிரதிப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்குரிய சேவையினை வழங்கியிருந்தனர். அத்துடன் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு.P. நித்தியானந்தன் அவர்களாலும், பிரிவுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி.P. அமுதினி, திருமதி.V. கலைவாணி மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.டெ. றொசைறோ ஆகியோரின் ஒருங்கிணைப்போடு திருமணப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிறப்புப் பதிவுக்கான முன்னேற்பாடுகளும் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.









குறிப்பாக கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக பயனாளிகளின் ஆவணங்களைச் சேகரிக்கும் பொறுப்பினை உதவி பிரதேச செயலாளர் திரு.பே. பிரணவரூபன், நிருவாகக் கிராம உத்தியோகத்தர் திரு.K.P. மனோஜ் இந்திரஜித், அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.P .புவிராஸ் ஆகியோர் மேற்கொண்டிருந்ததுடன், கிராம உத்தியோகத்தர்கள், தேசிய அடையாள அட்டைப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் M.M. கியாஸ்கான், திருமதி.K. சுவாசினி ஆகியோரின் பங்களிப்பு மற்றும் ஒன்றிணைந்த குழுச் செயற்பாடு என்பனவே குறித்த நடமாடும் சேவை வெற்றியளிப்பதற்கு வாய்ப்பாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, நிருவாக உத்தியோகத்தர்கள் திரு.OGK. குசுமிந்த, சமூக சேவை உத்தியோகத்தர் திரு.C. குணரெட்ணத்துடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள், அலுவலக பணியாளர்கள் குறித்த நிகழ்விற்கான தங்களது பூரண ஒத்துழைப்பினையும், நலன்புரி சேவைகளையும் வழங்கியமையும் முக்கிய அம்சமாகும். இந் நடமாடும் சேவையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களுக்கான சேவைகளைப் பெற்றுக்கொண்டதுடன், காலங்கடந்த பிறப்புப் பதிவு ஒன்றும், அறுபத்துநான்கு உத்தேச வயதுச் சான்றிதழ்களும், பதினொரு திருமணப்பதிவுகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன், முப்பத்தைந்து தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


















முதலாம் பக்கத்தொடர்

# முத்தமிழ் வித்தகருக்கு நூற்றாண்டு விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலைகளில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா 2025 மே மாதம் 11ஆம் திகதி அனுஸ்டிக்கப்பட்டது. மேலும் விபுலானந்தர் அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.







# உலகப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கேற்பு



பெண்கள் உலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருகின்றனர். வீட்டின் வேலைகள் முதல் வணிக நிறுவனங்கள் வரை, அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. இருப்பினும், பல நூற்றாண்டுகளாக, அவர்களின் உழைப்பு பெரும்பாலும் அங்கீகரிக்கப்படாமலும் குறைத்து மதிப்பிடப்பட்டும் வந்துள்ளது. இன்று, உலகப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது என்பது உணரப்படுகின்றது.

வரலாற்று ரீதியாக, பெண்களின் பங்கு பெரும்பாலும் வீட்டு வேலைகள் மற்றும் குழந்தைகளை கவனிப்பது போன்ற பணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. விவசாய சமூகங்களில் கூட, அவர்கள் வயல்களில் வேலை செய்தாலும், அவர்களின் பங்களிப்பு ஆண்களின் பங்களிப்பை விட குறைவான முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. தொழில்துறை புரட்சிக்குப் பின்னர், பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தொடங்கினர், ஆனால் அவர்கள் குறைந்த ஊதியம் மற்றும் மோசமான வேலை நிலைமைகளுக்கு ஆளானார்கள்.

இருப்பினும், கடந்த நூற்றாண்டில் நிலைமை படிப்படியாக மாறி வந்துள்ளது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைத்துள்ளன. பல நாடுகளில், பெண்கள் இப்போது மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள் மற்றும் வணிகத் தலைவர்கள் போன்ற உயர் பதவிகளில் உள்ளனர். அவர்கள் புதிய வணிகங்களை உருவாக்கி, புதுமையான யோசனைகளை உலகிற்கு கொண்டு வருகிறார்கள்.

பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பு பல வழிகளில் உலகப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கிறது. முதலாவதாக, அவர்கள் தொழிலாளர் சக்தியின் ஒரு பெரிய பகுதியை உருவாக்குகிறார்கள். அதிக பெண்கள் வேலைக்குச் செல்லும்போது, பொருளாதார உற்பத்தி அதிகரிக்கிறது. இரண்டாவதாக, பெண்கள் நுகர்வோராகவும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் வாங்கும் திறன் சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையை அதிகரிக்கிறது. மூன்றாவதாக, பெண்கள் பெரும்பாலும் தங்கள் குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் வருமானத்தை கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற விஷயங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இது நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.







இருப்பினும், உலகப் பொருளாதாரத்தில் பெண்களின் முழுமையான திறனை இன்னும் நாம் உணரவில்லை. பல நாடுகளில், பெண்கள் இன்னும் பாலின பாகுபாடு, குறைந்த ஊதியம் மற்றும் வேலைவாய்ப்புக்கான குறைந்த வாய்ப்புகள் போன்ற தடைகளை எதிர்கொள்கின்றனர். குழந்தை பராமரிப்பு வசதிகள் இல்லாமை மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் போன்ற காரணிகள் அவர்களின் தொழில் வாழ்க்கையைத் தொடர தடையாக உள்ளன.

இந்த தடைகளை நீக்குவது உலகப் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமானது. பெண்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும், அவர்களின் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலமும், நாம் அனைவரும் பயனடையலாம். அரசாங்கங்கள் பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டும். நிறுவனங்கள் பெண்களுக்கு ஆதரவான வேலைச் சூழலை உருவாக்க வேண்டும். சமூகங்கள் பெண்களின் பங்களிப்பை மதிக்கவும் அங்கீகரிக்கவும் வேண்டும்.

முடிவாக, பெண்கள் உலகப் பொருளாதாரத்தின் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் இன்றியமையாத பகுதியாகும். இலங்கையை பெருத்த மட்டில் தோட்டத் தொழில், ஆடைத் தொழிற்சாலை மற்றும் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லுதல் என்பனவற்றில் பெண்களே அதிகம் ஈடுபடுவதனை அறியமுடிவதுடன், சுயதொழிலிலும் அதிக பெண்கள் ஈடுபட்டு வருமானத்தைத் தாங்களாகவே பெற்றுக்கொள்கின்றனர்.

அவர்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு முக்கியமாகும். தடைகளை நீக்கி, அவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம், நாம் அனைவரும் ஒரு வளமான மற்றும் சமத்துவமான உலகத்தை உருவாக்க முடியும்.

கி.ஆஸ்திகா
துறைநீலாவணை



# உங்கள் கணினிப் பாவனையை மேம்படுத்த உதவும் விசைப்பலகை குறுக்குவிசை தொகுப்புக்கள்

ICT UNIT , DIVISIONAL SECRETARIAT, - NAVITHANVELI.

உங்களிடம் **Laptop**, **Desktop** என்ற ஏதேனும் ஒரு சாதனம் இருந்தால் கூட, கட்டாயம் இந்த முக்கியமான **11 Keyboard Shortcut Keys** இனை நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த **11 Keyboard Shortcut Key Control** உங்கள் ஒட்டுமொத்த கணினி அனுபவத்தையே மேம்படுத்தி மாற்றிவிடும் என்று சொன்னால் நம்புவீர்களா? சரி வாருங்கள் புதிய விஷயத்தை கற்றுக்கொள்ளலாம்.

பொதுவாகவே லேப்டாப் மற்றும் கம்ப்யூட்டர் பயன்படுத்தும் எல்லா மக்களும் **Ctrl + A, Ctrl + V** மற்றும் **Ctrl + C** போன்ற**Shortcut Key**களை தொடர்ந்து பயன்படுத்தி வருவார்கள். இதில் **Ctrl + A** என்பது **Select All** அம்சத்தை இயக்குகிறது. **Ctrl + C, Copy** செய்ய அனுமதிக்கிறது.

அதேபோல், **Ctrl + V Shortcut Key** பிரதி செய்த தகவல்களை தேவையான செயலிகளில் ஒட்டுவதற்கு **(Paste)** அனுமதிக்கிறது. இந்த மூன்று **Shortcut Key**களை தான் தினசரி பெரும்பாலான **Laptop** மற்றும் **Desktop** பயனர்கள் பயன்படுத்துகிறார்கள். இதைத் தாண்டி, இன்னும் பல முக்கியமான **Shortcut Key**கள் உங்கள் தினசரி கணினி அனுபவத்தை மாற்றம் செய்யும் திறனுடன் செயல்படுகின்றன. ஆனால், இதை பெரும்பாலானோர் பயன்படுத்துவதில்லை.

**1. Snipping Tool: Windows key** (மைக்ரோசாப்ட் விண்டோ லோகோவுடன் காணப்படும் **Keyboard key**) **+ Shift + S** அழுத்தினால் **Snipping Tool, Open** செய்யப்படும். இது உங்கள் திரையில் உள்ள தகவல்களை **Screenshot** எடுக்க அனுமதிக்கிறது.

**2. Hide All Windows: Windows key + D** அழுத்தினால், திறந்திருக்கும் அனைத்து **Windows**களும் மறைக்கப்பட்டு **Desktop** மட்டும் காண்பிக்கப்படும்.

**3. Launch Task Manager:** ஏதேனும் செயலிகள் **Hang** ஆகிவிட்டாலோ அல்லது அணுக முடியாமல் திரை உறைந்து விட்டாலோ **Ctrl + Shift + Esc** கீஸ் அழுத்துங்கள். இதில் அதிகமான **CPU** பயன்படுத்தும் **Apps** கிளிக் செய்து **END** கொடுத்தால் ஹேங்கிங் சிக்கல் தீர்க்கப்படும்.

**4. Launch Copilot: Windows key + C** அழுத்தினால் **Copilot** உடனே **Activate** செய்யப்படும். **Copilot** அம்சத்தை அடிக்கடி பயன்படுத்துபவர்களுக்கு இது சிறந்தது.

**5. Jump between browser tabs: Ctrl +Tab** அழுத்தினால் **Clokwise Jumping** மூலம் **Browser Tabs** மாற்றப்படும். **Ctrl + Shift + Tab** பிரஸ் செய்தால், **Anti-Clockwise Jumping** மூலம் **Browser Tabs** மாற்றப்படும்.

**6. Permanently delete a file: Shift + Delete Keys** அழுத்தினால், **Recycle Bin** செல்லாமல் நேரடியாக **Files** அழிக்கப்படும்.

**7. Undo an action: Ctrl + Z** அழுத்தினால், நீங்கள் தவறுதலாக அழித்த அல்லது **Copy Paste** செய்த விஷயங்களை **Rewind** செய்து படிப்படியாக பின்னோக்கிச் சென்று திருத்திக்கொள்ளலாம்.


**8. Lock Your Laptop or Computer: Windows key + L** அழுத்தி, உங்கள் கணினியை நொடியில் **Lock** செய்துகொள்ளலாம். மீண்டும் கடவுச்சொல்லை கொடுத்து திறந்து கொள்ளலாம்.

**9. Emoji menu:** நீங்கள் டைப்பிங் செய்யும் பொழுது **Emoji** இணைக்க விரும்பினால், **Windows key + .** (டாட்) அழுத்தி **Emoji Panel** ஐ திறந்து கொள்ளலாம்.

**10. See all Windows: Windows key + Tab** அழுத்துவதன் மூலம் உங்கள் கணினியில் எத்தனை செயலிகள் திறந்த நிலையில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

**11. Activate Sticky keys: Shift Key** ஐ **5** முறை தொடர்ச்சியாக அழுத்தினால், **Sticky Key Mode** செயற்படுத்தப்படும். இதன் பிறகு தொடர்ச்சியான இரண்டு **Key** அல்லது மூன்று **Key**களை ஒன்றின் பின் ஒன்றாக அழுத்தி, **Shortcut** அம்சங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அம்சத்தை விரைவில் அறிமுகப்படுத்தும் வாட்ஸ்அப்



**Smartphone** மூலமாக மட்டுமே **Voice** அல்லது **Video Call** செய்ய முடியும். ஆனால், வரவிருக்கும் இந்த அம்சமானது, துணை சாதனங்களிலும் இந்த அம்சத்தை பெறுவதை உறுதி செய்யும். **Windows** மற்றும் **Mac OS** சாதனங்களில் **WhatsApp Web Client**ன் மூலம் **Voice** மற்றும் **Video Call** அழைப்பை மேற்கொள்வதற்கான **Meta** நிறுவனத்தின் சோதனை தொடங்கியுள்ளது. இதன் மூலம், பயனர்கள் தங்கள் கணினிகளிலிருந்து நேரடியாக வீடியோ அல்லது **Voice Call**களை செய்யலாம் மற்றும் பெறலாம்.

இந்த புதிய அம்சமானது, **Desktop** மற்றும் மடிக்கணினிகளில் **WhatsApp** பயன்படுத்தும் பயனர்களுக்கு குறிப்பாக பயனளிக்கும் மற்றும் நிலையான பயனர் அனுபவத்தையும் உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது தனிப்பட்ட மற்றும் **Group Call**களுக்கு ஏற்றவாறு பயனர்கள் தங்கள் **Smartphone** அருகில் இல்லாவிட்டாலும் அழைப்புகளை மேற்கொள்ள இது அனுமதிக்கிறது.

## புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் கூகுள்!




செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. பயனாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை வழங்குவதில் செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் கூகுள் தற்போது தனது பயனாளர்களுக்கு **Ask For Me** என்ற புதிய செயற்கை நுண்ணறிவு வசதியை உருவாக்கி உள்ளது. இந்தப் புதிய அம்சத்தின் மூலம் பயனாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள வணிக நிறுவன கடைகளில் எளிதாக பொருள்கள் குறித்தும், சேவைகள் குறித்தும் விசாரித்துக்கொள்ள முடியும்.

தெளிவாக கூறவேண்டுமானால், உங்களுக்கு எதாவது ஒரு கடையில் பொருளோ, சேவையோ தேவைப்படுகிறது என்றால் அதற்காக நீங்கள் அந்தக் கடைக்கு நேரடியாக தொடர்பு கொண்டு விசாரிக்கத் தேவையில்லை. மாற்றாக, கூகுளே அதனுடைய **Artificial Intelligence** தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உங்களுக்காக அந்த கடையை தொடர்பு கொண்டு விவரங்களை கேட்டு உங்களுக்கு தரும். இந்த புதிய வசதியினை தற்பொழுது சோதனை அடிப்படையில் சில பயனர்களுக்கு மட்டும் கூகுள் கொடுத்து வருகிறது. கூடிய விரைவில் அனைத்து பயனர்களுக்கும் இந்த சேவை நீட்டிக்கப்பட உள்ளது என கூகுள் தெரிவித்துள்ளது.

# நல்ல அர்த்தமுள்ள தமிழ் பழமொழிகள் சிந்தித்து ரசிப்பதற்கு...

1. தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.

2. தீயில் இட்ட நெய் திரும்ப வராது.

3. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.

4. தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.

5. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.

6. செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம் அழுகிறது.

7. கறந்த பால் காம்பில் ஏறாது.

8. கடலைத் தாண்ட ஆசையுண்டு கால்வாயை தாண்ட கால் இல்லை.

9. கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.

10. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். மரம் ஏறி கை விட்டவனும் கெட்டான்.

11. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.

12. கூப்பாட்டால் சாப்பாடாகுமா?

13. சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?

14. உறவு போகாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது. (எத்தனை பெரிய உண்மை. போய் வந்து கொண்டிருந்தால் தான் உறவு நிலைக்கும். கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டே இருந்தால் தான் திரும்பக் கிடைக்கும்).

15. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா? (இன்று பலரும் இப்படித்தானே இருக்கிறார்கள்?)

16. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது. (எல்லாம் காலத்தின் கோலம்.)

18. அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான். (அதிகமாய் படித்தவர்கள் பலரும் இப்படித்தான்).

19. உள்ளப் பிள்ளை உரலை நக்கிக் கொண்டிருக்க மற்றொரு பிள்ளைக்கு மனம் ஏங்குது.

20. இறுகினால் களி. இளகினால் கூழ்.

R.Keshane,
Kalmunai-02

## மாணவர் ஆக்கம்



# குறுக்கெழுத்துப் போட்டி இல.16 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 நி | 2 ல | 3 ந | டு | க் | க | 4 ம் | ■ |
| 5 த் | சி | தி | ■ | ■ | ■ | 6 ச | 7 பை |
| 8 தி | தி | ■ | 9 க | 10 ற் | 11 பூ | ர | ம் |
| 12 ல | ம் | 13 ப | ■ | 14 பா | ர் | ■ | மு |
| ம் | ■ | 15 த் | க | ம் | வீ | 16 சா | ■ |
| ■ | 17 ணி | து | ■ | 18 ட | க | க | ம் |
| 19 லை | கா | ■ | 20 ப | கு | ம் | ம் | ■ |
| 21 மா | த | ம் | ரு | ■ | ■ | 22 ர | தி |

## பாராட்டு பெறுவோர்

டி.ஜாசுகி
பாண்டிருப்பு

RELOAD

1st 200/=

2nd 150/=

3rd 100/=

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 17

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | ■ | | ■ |
| | ■ | 8 | | | 9 | ■ | 10 |
| 11 | 12 | | | ■ | 13 | 14 | |
| 15 | | | ■ | 16 | | | ■ |
| 17 | | ■ | 18 | | | | 19 |
| ■ | 20 | 21 | | | ■ | ■ | |
| 22 | | | | ■ | 23 | | |

## இடமிருந்து வலம்

01. எதிர்பாராமல் ஏதேனும் நடந்துவிட்டால் இப்படிச் சொல்லிக் கொள்வார்கள்.
04. படிக்கப்போனால் இதற்கு முகம் கொடுக்க வேண்டும்.
06. தலையணை என்றால் இதற்குத்தான் முக்கியத்துவம் அளிப்பர் (குழம்பி).
08. நினைவு என்றும் சொல்லலாம்.
11. துன்பம் என்றும் பொருள்படும்.
13. ஒருவகை மீன் இனம்.
15. இதனை அடையாளத்திற்கு அல்லது நேர்த்திக்கு கட்டிக் கொள்வர் (குழம்பி).
16. பொம்மை என்று பொருள்படும்.
17. வலிமையானது. தமிழ் எழுத்துக்களில் இப்படி ஒரு வகையும் உண்டு (திரும்பி).
18. சலனம் என்றும் பொருள்படும்.
20. நேராக இல்லாமல் இப்படிப் பார்ப்பதும் ஒரு அழகுதான்.
22. இவை பூமிக்குள் இருக்கும் பொக்கிஷங்கள்.
23. ஒற்றுமைக்கு இதனை ஒப்பிடுவர் (திரும்பி).

## மேலிருந்து கீழ்

01. குற்றச் செயல்களை ஆராய்வதற்கு உதவுவது.
02. அறிவியல்.
03. 10 பாடல்களின் தொகுப்பு (குழம்பி)
05. இது இன்றி அமையாது உலகு என்பர் (தலைகீழ்).
07. சாந்தமான ஒரு பிராணி (தலைகீழ்).
09. கவலை என்று பொருள்படும் (குழம்பி).
10. ஒன்றுடன் ஒன்றைப் பொருத்துவதற்கு தேவையானது.
12. ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிப்பவரை இப்படிக் கூறுவர்.
14. இழிவான ஒரு குணம் (குழம்பி).
16. தானியம் ஒன்று.
18. இது பன்னிரண்டாம்.
19. இசை என்றும் சொல்லலாம் (தலைகீழ்).
21. "இன்னுமொரு" என்பதை இப்படியும் சொல்லலாம் (தலைகீழ்).

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.06.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## 6.2 நீண்ட கால குத்தகை உறுதிப் பத்திரம் பெயர் மாற்றல்

இதன் பொருட்டு பிரதான இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**1.** குத்தகைக்கு வழங்கப்பட்ட தேவைக்காகவே காணி பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**2.** எவ்வித தாமதமும் இன்றி குத்தகைப் பணத்தை செலுத்தி, காணியை தடையின்றி அனுபவித்தல்.

**i.** மேலே குறிப்பிட்ட விடயங்கள் பூர்த்தி செய்யப் பட்டிருப்பின் சட்டத்தரணி ஊடாக தயாரிக்கப்பட்ட பெயர் மாற்றல் உறுதிப்பத்திரத்துடன் குத்தகைதாரரின் கோரிக்கை கிராம சேவகர் அதிகாரி மற்றும் குடிசன அதிகாரியின் பரிந்துரையுடன் குறித்த பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**ii.** பெயர் மாற்றல் உறுதிப் பத்திரத்தின் வருடம் வரை குத்தகை வழங்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து சான்றிதழ் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரை மாகாண காணி ஆணையாளர்/ பிரதி காணி ஆணையாளர் ஊடாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**iii.** காணி ஆணையாளரிடம் குறித்த ஆவணங்கள் கிடைத்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்ற பெயர் உறுதிப்பத்திரத்தில் முதல் குத்தகை உறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருப்பின் எழுத்து மூலமான அனுமதி நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின் ஊடாக மூன்று பிரதிகளாகப் பிரதேச செயலாளரிடம் அனுப்பப்படும்.

**iv.** பிரதேச செயலாளரினால் காணி ஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதி சம்பந்தப்பட்ட சட்டத்தரணி/ நொத்தாரிஸுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அவரால் அனுமதிக்கப்பட்ட சட்டமூலத்தின் பிரகாரம் உறுதிப் பத்திரம் தயாரிக்கப்பட்டு காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதி பிரதேச செயலாளரிடமும் முதல் பிரதி பெயர் மாற்றப்பட்டவரிடமும் வழங்கப்பட வேண்டும்.

எனினும் நீண்ட கால குத்தகை உறுதிப் பத்திரத்தில் காணியின் ஒரு பகுதியை மாத்திரம் வழங்க முடியாது.

### 6.3 சுதந்திர கொடுப்பனவுப் பத்திரத்தினைப் பெயர் மாற்றல் (அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது)

சுதந்திர கொடுப்பனவுப் பத்திரம் என்பது அரசாங்கத்தின் எதுவிதமான தொடர்பும் இல்லாது அனைத்து உரிமைகளுடனும் கையுதிர்க்கப்பட்ட காணியாகும். அதன்படி இவ்வாறான காணியை பெயர் மாற்றுவதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவை இல்லை. எனினும் பகுதிகளாக்கி விற்பனை செய்வதாயின் அந்த பகுதி ஆகக் குறைந்த அளவாகிய குறித்த மாகாண உள்ளூராட்சி நிறுவனத்தின் அனுமதியளித்துள்ள அளவினை விட குறைந்ததாக இருக்கக் கூடாது.

நொத்தாரிஸ் ஒருவரின் முன்னிலையில் பெயர் மாற்றல் உறுதிப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதன் மூலம், இவ்வாறான காணியைப் பெயர் மாற்றுவதற்கான இயலுமை உள்ளது.

### 6.4 அரசாங்கத்தின் உறுதிப் பத்திரம் ஒன்றை வங்கி மற்றும் நிதி நிறுவனத்தில் அடகு வைப்பதற்கு செய்ய வேண்டியவை

### *6.4.1 கொடுப்பனவு பத்திரம் (ஜயபூமி, சுவர்ண பூமி, ரத்ன பூமி, இசுரு பூமி, ரன்பிம)*

சட்டத்தின் அனுமதி பெற்ற வங்கி/ நிதி நிறுவனத்திடம் அடகு உறுதிப் பத்திர சட்டமூலம் தயாரித்து, அதன் பொருட்டு பிரதேச செயலாளர் தரும் எழுத்து மூல அனுமதியின் அடிப்படையில் அடகுப் பத்திரம் ஒன்றைத் தயாரித்து, பதிவு செய்வதன் மூலம் வங்கி/ நிதி நிறுவனத்திடம் கொடுப்பனவுப் பத்திரத்தினை அடகு வைக்க முடியும்.

### *6.4.2. நீண்ட கால குத்தகை உறுதிப்பத்திரம்*

குறித்த நிதி நிறுவனத்தினால் அடகு உறுதிப் பத்திரம் ஆவணம் தயாரிக்கப்பட்டு அதனை பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர்/ பிரதி காணி ஆணையாளர் ஊடாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து எழுத்து மூலம் அனுமதி பெற வேண்டும். காணி ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதியின் அடிப்படையில் அடகு உறுதிப் பத்திரத்தினை பதிவு செய்ய முடியும்.

### *6.4.3. சுதந்திர கொடுப்பனவு பத்திரம்*

சுதந்திர கொடுப்பனவு உறுதிப் பத்திரத்தினை அடகு வைப்பதற்கு அரசாங்கத்தின் எந்தவொரு அதிகாரியினதும் அனுமதியைப் பெறுவது அவசியமல்ல. நிதி நிறுவனம் ஊடாக தயாரிக்கப்பட்ட அடகு உறுதிப்பத்திரம் ஊடாக சாதாரண சட்டத்தின் மூலம் அடகு வைக்க முடியும்.

## 6.5 காணி கொடுப்பனவு பத்திரம் மற்றும் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்தல்

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதான பத்திரத்தினை வழங்கியிருப்பின், அதனை இரத்துச் செய்ய முடியாது. எனினும், பிரதான பத்திரத்தின் உரிமையாளர் தமது விருப்பத்துடன் காணியை அரசாங்கத்திற்கு ஒப்படைப்பதன் மூலம் இரத்துச் செய்ய முடியும். அவ்வாறே,பிரதான பத்திரத்தின் உரிமையாளர் அல்லது அவரது வாரிசினை தேடி அறிய முடியாத போது, அவ்வாறான சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கு அதிகாரம் உள்ளது.

அனுமதிப் பத்திரமாயின் பிரதேச செயலாளரினால் இரத்துச் செய்ய முடியும். அது கீழ்வரும் காரணங்களுக்காக மட்டும்:

1. *காணியில் வதியாமை*
2. *அபிவிருத்தி செய்யாமை*
3. *சட்டத்திற்கு தீங்கு ஏற்படும் வகையில் பயன்படுத்தல்*

அவ்வாறு இரத்துச் செய்வதாயின், அதன் பொருட்டு பிரதேச செயலாளரினால் நிர்ணயிக்கப்பட்ட பத்திரத்தின் ஊடாக அனுமதிப் பத்திர உரிமையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அதன் போது அனுமதிப் பத்திர உரிமையாளருக்கு அனுமதிப் பத்திரத்தினை இரத்துச் செய்யாதிருப்பதற்கான காரணங்களை முன் வைப்பதற்கான உரிமை உள்ளது. இது தொடர்பில் உங்களுடைய விசேட கவனம் போன்றே, எச்சரிக்கையுடன் இருப்பதும் உங்களுடைய காணியின் உரிமையை பாதுகாப்பதற்கு உங்களுக்கு உதவும். அவ்வாறே, அனுமதிப் பத்திரத்துடன் கூடிய காணிக்கு, காணியை நன்றாக அபிவிருத்தி செய்ய முடியுமாயின் மாத்திரமே கொடுப்பனவு பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கிடைக்கும். இது தொடர்பிலும் நீங்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

NMM A.Sujan
Colonization Officer



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

வாசகர் உறவுகளுக்கு அடியேனின் பணிவான வந்தனங்கள். இந்த மாத இதழில் நாம் எமது மக்களின் கலைகள் தொடர்பாக பார்க்கலாமா?

ஆம்! கலைகள் அறுபத்து நான்கு அல்லவா? எம்மவரிடையே எத்தனையோ கலைகள் காணப்பட்டன. அவை எவை என ஆராய்கையில் இப்பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாகக் காணப்பட்ட போதிலும் மதத்தால் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் என நான்கு வகை மதத்தவர்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவரவர் கலைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகையால் அவற்றைத் தனித்தனியே காண்பதே நன்று.

முதலில் இந்துக் கலைகளைத் தருகின்றேன். இவர்களின் கலைகளாக நாட்டுக்கூத்து, கோலாட்டம்(வசந்தன்), கரகம், கும்மி, நாடகம், ஓவியம், காவடி மற்றும் சிலம்பம் போன்ற கலைகள் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றிலும் முதன்மையானதும் பழமையானதுமாக நாட்டுக்கூத்தே விளங்கியுள்ளது. இந்த நாட்டுக்கூத்துக் கலையை துறைநீலாவணையில் இருந்து எமது நாவிதன்வெளி பிரதேசத்திற்கு கொண்டுவந்தவர் திரு. கே.தம்பியப்பா அவர்களே ஆவார். இவர் ஒரு பிரபல அண்ணாவியாராவார். 11ஆம் கிராமம், மத்தியமுகாம்-05 இல் வாழ்ந்த இவர் தனது விவசாயத் தொழிலோடு நாட்டுக்கூத்துக் கலையையும் வளர்த்து வந்துள்ளார். இவரது காலத்தில் "வடமோடி" முறையில் அமைந்த பல நாட்டுக் கூத்துகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. அவற்றில் "அர்ச்சுனன் தவநிலை" எனும் கூத்து மிகவும் புகழ்பெற்றிருந்ததாக மக்களால் பேசப்படுகின்றது.

இவரின் பின்னே இவரது மகனான திரு. தம்பியப்பா அழகையா அவர்கள் தந்தையார் வழி நாட்டுக் கூத்துக் கலையை மிகவும் சிறப்புற வளர்த்து வந்தார் என்று கூறலாம். இவரும் வடமோடி முறையில் அமைந்த நாட்டுக் கூத்துகள் பலவற்றைத் தயாரித்து அண்ணாவியாராக இருந்து அரங்கேற்றம் செய்துள்ளார். நாவிதன்வெளிப் பிரதேசத்திற்கே ஒரேயொரு நாட்டுக்கூத்துக் கலைஞராக, அண்ணாவியாராக இருந்து முடிசூடா மன்னராக விளங்கினார் என்னபது மிகையல்ல.

கிராமங்களில் வாழ்ந்த பல கலையார்வம் உள்ளவர்களைக் கொண்டு பல புகழ்பெற்ற நாட்டுக்கூத்துகள் இவரால் பல இடங்களில் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. வில் வளைவு, குயலவன் போன்ற நாட்டுக் கூத்துகள் இன்றும் மக்களால் பேசப்படுகின்றன.

இந்தப் பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்துப் பற்றி தற்போதுள்ள எல்லோருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதனால் அது தொடர்பான சில தகவல்களைத் தருகின்றேன். நாட்டுக் கூத்து இரண்டு வகையான முறையில் நெறியாளப்படும். அதில் ஒன்று வடமோடி, மற்றையது தென்மோடி எனப்படும். அதில் திரு தம்பியப்பா அழகையா ஆகியோரது முறை வடமோடி அகும். இக்கூத்துக் கலையானது திறந்த

வெளியில் ஓர் இடத்திலேயே பயிற்றுவிக்கப்பட்டு பின்னர் திறந்த அரங்கில் அரங்கேற்றப்படும். ஒவ்வொரு கதாபாத்திரங்களை உடையவர்களும் தங்கள் பாத்திரங்களுக்கான விடயங்களைப் பாடல்களாலும், கதைகளாலும் கூறி அண்ணாவிமார்களின் மத்தள, தாள இசைக்கேற்ப ஆடி நடிப்பர். அந்த அரங்கிலே இன்னும் சிலர் பக்கப்பாட்டு பாடுவர். அவர்கள் நடிகர்களிடம் சில விடயங்களைக் கேட்பார்கள். ரசிகர்களை மகிழ்விப்பதற்காக. உதாரணமாக

கேட்பவர்; நீங்கள் யார்?,
நடிப்பவர்: நான்தான். அனுமன், இராமபிரானின் தூதன்.
கேட்பவர்: எங்கே செல்கிறீர்கள்?
நடிப்பவர்: நான் எம்பிரானின் தேவியார் சீதை அன்னையைத் தேடி செல்கிறேன் என்பார்.
இதனை மக்கள் மகிழ்ச்சியாக கேட்டு ரசிப்பர்.

அக்கால மக்களிடையே ஒரு சிறப்பு காணப்பட்டது. அது என்னவெனில் படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கும் பாரதக் கதை, இராமாயணக் கதை பற்றிக் கேட்டால் மிகத் தெளிவாகக் கூறுவார்கள். குந்திதேவி யார் என்று கேட்டால் பஞ்சபாண்டவர்களின் தாயார் என்று எவரும் கூறுவார்கள். அதற்குக் காரணம் பாரதமும் இராமாயணமும் முழுமையாக இந்தக் கூத்துகளில் பரவிக் காணப்பட்டிருந்தமையாகும். அதனால் மக்களிடம் அந்தத் தகவல்கள் இலகுவாகச் சென்றடைந்தன. ஆனால் இப்போது அவ்வாறு எல்லோரும் கூறமாட்டார்கள். ஏனென்றால், நாட்டுக் கூத்தினைத் தயாரிப்பது, நடிப்பது, அரங்கேற்றுவது போன்ற செயற்பாடுகளில் மக்கள் கவனம் செலுத்துவது குறைவாகக் காணப்படுகிறது.

இவ்வாறான மேன்மையான நாட்டுக் கூத்துக் கலையை எமது பிரதேசத்தில் மிளிரச்செய்த பெருந்தகையரான திரு.தம்பியப்பா அழகையா அவர்களை பின்நாளில் தமிழ் தினப் போட்டிகளுக்காக சில புகழ்பெற்ற பாடசாலைகள் அழைத்துச் சென்று மாணவர்களைப் பயிற்றுவித்து வெற்றி பெற்ற வரலாறுகளும் உண்டு.

01. கமு/சது/நாணமடு இந்துக்கல்லூரி மாணவர்களின் நாட்டுக் கூத்து மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது. (2004 ஆண்டு)
02. பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஞாபகார்த்தக் குழுவினரால் கொழும்பில் நடாத்தப்பட்ட நாட்டுக் கூத்துப் போட்டியில் கமு/சது/நாணமடு இந்துக்கல்லூரி மாணவர்கள் வெற்றியீட்டியதோடு பணப்பரிசும் பெற்றமை, அண்ணாவியாரும் கௌரவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2005ஆம் ஆண்டு)

இவ்வாறாக நாட்டுக் கூத்துக் கலைக்கு உயிர் கொடுத்து வளர்த்து எம் நாவிதன்வெளிப் பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த அண்ணாவியார் உயர்திரு. தம்பியப்பா அழகையா அவர்களைப் பாராட்டி அரசினால் இலங்கை கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான கலாபூசண விருது - (2006ஆம் ஆண்டு) கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்தோடு கலாபூசணம் அழகையா அவர்களுக்கு நாவிதன்வெளிப் பிரதேச சபையினரால் சாகித்திய விருதும், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் கலைஞர் கௌரவமும், விருதும் வழங்கப்பட்டதுடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த மாகாண உயர் விருதான "ஆளுநர் விருது" ஆளுநரால் (2007ஆம் ஆண்டு) வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவரது கலைச்சேவையினைக் கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாதாந்தம் கலைஞர் ஓய்வூதியம் அவரது இறுதிக்காலம் வரை வழங்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், உள்ளூர் அமைப்புக்களினால் பல விருதுகள் என நிறைந்த விருதுகள் என இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த கலாபூசணம் அழகையா அவர்கள் கடந்த 2020ஆம் ஆண்டு இவ்வுலகிற்கு விடைகொடுத்தார். அவரது மறைவுடன் அவரது நாட்டுக்கூத்துக் கலையும் வேறெந்த வாரிசுகளுமின்றி அஸ்தமனமாகிவிட்டமை கவலை தரும் விடயமாகும். எனவே, கற்றோர்கள் இவ்வருங்கலையை மீண்டும் புத்துயிர் ஊட்டி எதிர்கால சந்ததியினரிடம் கொண்டு சென்று வளர்க்க முயலவேண்டும் என்பதே அடியேனின் பணிவான வேண்டுகோள்.

சா.செல்வசிகாமணி
ஓய்வுநிலை அதிபர்
மத்தியமுகாம்.




# பிளாஸ்ரிக் (Plastic) மனித குலத்திற்கு வரமா? சாபமா?



"நீரின்றி அமையாது உலகு" என்கின்ற வள்ளுவரின் வாக்கு நீரின் முக்கியத்துவத்தினை இவ்வுலகிற்குப் பறைசாற்றுகின்றது. அதே போல் இன்று பிளாஸ்ரிக் (Plastic) இன்றி அமையாது என கூறும் அளவிற்கு பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன்(Polythene) மனிதனுடைய வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. கி.பி 1862ஆம் ஆண்டு அலெக்சாண்டர் பார்க்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது தான் இந்த பிளாஸ்ரிக் (Plastic). பிளாஸ்ரிக் (Plastic) என்பதன் தூய தமிழ் பதம் ~ நெகிழி |. உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு வடிவங்களில் இதன் பாவனை அதிகரித்த வண்ணமே உள்ளது.

முதலில் பிளாஸ்ரிக் (Plastic) மனித குலத்திற்கு எவ்வாறெல்லாம் பயன்படுகின்றது என்பது பற்றி பார்க்கலாம். உற்பத்தி, வணிகம், போக்குவரத்து, அறிவியல் என சகல துறைகளிலும் பிளாஸ்ரிக் (Plastic) தான் மிக முக்கிய தடத்தினை பதித்துள்ளது. உணவினை பொதி செய்கின்ற பைகள், குடிநீர் போத்தல்கள், கையுறைகள், மேசைகள், கதிரைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள், நாம் எழுதுவதற்கு பயன்படுத்துகின்ற பேனாக்கள், நீர்க்குழாய்கள், மின்னாளிகள், தூரிகைகள், நீர்த்தாங்கிகள், காற்றுடைப்பான்கள்,குவளைகள், உணவுப் பாத்திரங்கள், குடங்கள், வாகன உதிரிப்பாகங்கள், தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி போன்ற தொலைத் தொடர்பு சாதனங்கள், சலவைத்தூள் மற்றும் சவர்க்காரப் பொதிகள், சில வகையான பயணப்பைகள், பாதணிகள், சில வகையான அணிகலன்கள் என பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன் (Polythene) வகைகளைத்தான் அன்றாடம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இதற்கு மிக முக்கிய காரணம் பாரம் குறைவு என்பதனால் எடுத்துச் செல்வதற்கு இலகு, குறைந்த செலவு, வர்ணமயக் கவர்ச்சி என்பதாகும்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" நன்மைக்காக மனிதன் உருவாக்கிய பிளாஸ்ரிக் (Plastic) அதை விட தீமையைத் தருகின்றது என கூறினால் பலருக்கு வினோதமான விடயமே! நாம் பயன்படுத்திய பின்பு பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன் (Polythene) கழிவுகளை சாதாரணமாக சூழலில் வீசி விடுகின்றோம். இதன் விளைவுகளோ ஏராளம். மண்ணில் புதைப்பதனால் பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன் (Polythene) உக்கி அழிவதில்லை என்பது நம்மில் பலருக்குத் தெரியாது அத்துடன் எமது புமியில் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அழியாமல் இருக்கும் தன்மையினை உடையவை. இவை மண்ணில் சேரும் போது மண்ணின் வளம் அற்றுப் போகின்றது. இதனை தயாரிக்கும் போது வெளிவிடப்படுகின்ற இரசாயனக் கழிவுகள் நீரினை மாசுபடுத்துகின்றது. இதன் சிறுதுகள்கள் மழை நீருடன் சேர்ந்து கீழிறங்கி நிலத்தடி நீரினை அடைகின்றது. இதனால் அந்நீரும் மாசடைகின்றது. கொதிக்க வைத்து அருந்தினாலும் இதன் தாக்கத்தினை முற்றாக தவிர்க்க முடியாது என்பதே உண்மை.

இக்கழிவுகளை எரிக்கும் போது வெளிவிடப்படுகின்ற நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தில் கலந்து வளியினை

மாசடையச் செய்கின்றது. மைக்ரோ பிளாஸ்ரிக் (Micro Plastic) என்கின்ற சொற்பதம் மருத்துவ உலகில் இன்று பயன்படுத்தப்படுகின்றது. தண்ணீர், உணவு மற்றும் சுவாசம் என்பவற்றினூடாக பிளாஸ்ரிக் (Plastic) துகள்கள் மனித உடலில் கலக்கின்றன என்பது மருத்துவ ரீதியில் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மனித உடலுறுப்புக்களில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டு சுவாசநோய், புற்றுநோய் என பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுகின்றன. எமது நாட்டில் புற்று நோயாளார்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. மனிதர்களுக்கு மாத்திரமின்றி விலங்குகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படத்தான் செய்கின்றன. எடுத்துக் காட்டாக திருகோணமலை பிரதேசத்தில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் பொலித்தீன் (Polythene) கழிவுகளை மான் கூட்டம் உணவாக உட்கொள்கின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

எமது நாட்டின் வளமான கடலானது இன்று உயிர்ப்பற்ற கடலாக மாறி வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் உலக நாடுகளின் பிளாஸ்ரிக் (Plastic) கழிவுகளை கொட்டுகின்ற இடமாக எமது நாட்டின் கடலோரப் பகுதிகள் மாறியுள்ளன. எமது நாட்டில் சேருகின்ற கழிவுகளும் கடற்கரையோரங்களில் தான் கொட்டப்படுகின்றது. கொழும்பு, காலி, திருகோணமலை போன்ற கடலோரப் பிரதேசங்களில் அளவிற்கதிகமான பிளாஸ்ரிக் (Plastic) கழிவுகள் குவிவதனைக் காணலாம். அது மாத்திரமின்றி கடந்த காலத்தில் (2021ஆம் ஆண்டு) எக்ஸ்பிரஸ் பேர்ள் (X-Press Pearl) கப்பலினால் ஏற்பட்ட பேரழிவனைக் குறிப்பிடலாம். இதன் விளைவாக இரசாயனக் கழிவுகள் நீரில் கலந்தது மாத்திரமின்றி பலலாயிரக்கணக்கான பிளாஸ்ரிக் மணிகள் கடலில் கலந்தது. எண்ணிலடங்காத கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மீன்கள், கடலாமைகள், தேனீ மீன்கள் போன்ற கடல்வாழ் உயிரினங்கள் பிளாஸ்ரிக் (Plastic) துண்டுகளை உணவாக கருதி விழுங்கி உயிரிழக்கின்றன. பிளாஸ்ரிக்(Plastic) இனை உட்கொள்கின்ற மீன்களைத் தான் நாம் உணவாக உட்கொள்கின்றோம். இதன் விளைவினை மீண்டும் மீண்டும் கூறத்தேவையில்லை. இன்று பிளாஸ்ரிக் (Plastic) மனித குலத்திற்கு சாபமாகவே மாறியுள்ளது. பிளாஸ்ரிக் (Plastic) கழிவுகளில் மிகக் குறைந்த சதவீதமானவை மாத்திமே மீள்சுழற்சிக்குச் செல்கின்றது. இதனை உற்பத்தி செய்வதற்கான செலவினை விட கழிவுகளை முகாமை செய்வதற்கே அதிக செலவு ஏற்படுவதாக புள்ளிவிபரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

2017ஆம் ஆண்டு பிளாஸ்ரிக் (Plastic) கையுறைகள் மற்றும் சில ஒற்றைப் பாவனை பிளாஸ்ரிக்; (Single- use Plastic) பொருட்களுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது. 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் மேலும் சில பிளாஸ்ரிக் (Plastic) வகைகளுக்கு தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது மீள்சுழற்சி (Recycle) நிலையங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளது. பசுமைத் தொழில் நுட்பங்களுக்கான எண்ணக்கருக்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாமும் முடிந்த வரை பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன் (Polythene) போன்றவற்றிற்குப் பதிலாக மாற்று வழிகளைக் கையாள வேண்டும். எமது மூதாதையினரைப் போன்று நாமும் உணவுகளைப் பொதி செய்வதற்கு உலர் வாழை இலைகள், தாமரை இலைகள், கடதாசிப் பைகள் போன்றவற்றை பயன்படுத்தலாம். பிளாஸ்ரிக் (Plastic) பயணப்பைகளுக்குப் பதிலாக துணிப்பைகள், சணல் பைகளைப் பயன்படுத்தலாம். தற்போது சில உணவகங்களில் மட்பாத்திரங்கள், உலோகப் பாத்திரங்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். பிளாஸ்ரிக் (Plastic) போத்தல்களுக்குப் பதிலாக முடிந்தவரை கண்ணாடிப் போத்தல்களை உபயோகிக்கலாம். இன்று சில உற்பத்தி நிறுவனங்கள் மீள்பயன்பாட்டு போத்தல்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளன.

பிளாஸ்ரிக் (Plastic) மற்றும் பொலித்தீன் (Polythene) நம்முடைய வாழ்வில் மிக முக்கிய அங்கமாக மாறியுள்ள போதிலும் அதன் பக்க விளைவுகளை உணர்ந்து பாவனையைக் குறைப்பது மனிதர்களாகிய எம்மவர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

செல்வி. திருச்செல்வம் தர்சினி
நாவிதன்வெளி.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# கல்வியின் நோக்கத்தை வெற்றிகரமாக்குவதற்கான செயற்பாடுகள்



க.பொ.த(உ/த) பரீட்சைக்கு முகங்கொடுப்பதற்காக தங்களிடம் காணப்படும் பலம், பின்னடைவு, சந்தர்ப்பம் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக தற்பொழுது உங்களுக்கு விளக்கம் இருக்கும். கல்வியின் நோக்கத்தை வெற்றிகரமாக்குவதற்காக பலம், மற்றும் சந்தர்ப்பங்களின் உயர்ந்தபட்சப் பயன்பாடுகளைப் பெற்றுப் பின்னடைவுகள் மற்றும் அச்சுறுத்தல்களை சவாலாகக் கருதி அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குரியதாக தங்களுக்கு தங்களது பின்னடைவுகள் மற்றும் அச்சுறுத்தல்களை நீக்கி கற்றல், நினைவில் வைத்திருத்தல், நேர முகாமைத்துவத்தின் மூலம் உயர்தரப் பரீட்சையை வெற்றிகரமாக்க முடிகிறது. இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்ற முடியும்.

**1. சரியான குறிப்புக்களை எழுதுதல்.**

**2. நேர முகாமைத்துவம்.**

- கற்றல், நித்திரை, களியாட்ட நிகழ்வு போன்ற சகல பணிகளின் போதும் நேரத்தை வகைப்படுத்தி காலத்தை முறையாக முகாமைத்துவப்படுத்தல்.
- மேற்கொள்ள வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தவற்றை தீர்மானித்து அதற்குக் காலத்தை பயன்படுத்தி தேவையற்றவற்றிற்கு காலத்தை வீணடிக்காதிருத்தல்.
- நேரசூசியைத் தயாரித்தல்.
- நேரசூசியை வாரத்திற்கொருமுறை மறுசீரமைத்தல்.

**3. கற்றலை இலகுவாக்கும் முறைகளைப் பின்பற்றல்.**


- கற்பதற்காகப் பொருத்தமான சூழல் நேரத்தைத் தேர்ந்தெடுத்தல்.
- குறிப்பில் உள்ள அனைத்தும் விளங்கும்வரை குறிப்பை எழுதுதல்.
- அதற்குப் பின்னர் சிறு குறிப்பை எழுதுதல்.
- கற்கும்போது முடியுமான வரை நினைவில் வைத்திருக்கக்கூடிய இலகு முறைகளைப் பயன்படுத்தல்.
- சூத்திரம், புள்ளிவிபரங்கள் போன்றவற்றை நினைவில் வைத்திருப்பதற்கு இலகுவான முறைகளைக் கையாளல்.
- கடினமான விடயங்களை பாடல்களுக்கு மாற்றியமைத்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்தல்.
- கற்றவைகள் ஊடாக கேள்விகளுக்கு உரிய காலத்தை வழங்கிப் பதிலளித்தல்.

**4. பாடசாலைக் கல்வியின் பின்னர் உயர்கல்வி தொழிற்பயிற்சிப் பாடநெறி மற்றும் தொழிலுக்காக பிரவேசித்தல்.**

**4.1 உயர்கல்விக்கான சந்தர்ப்பம்.**

பாடசாலைக் கல்வியின் பின்னர் வெற்றிகரமான தொழிலாளராக மாற்றம் பெற உயர்கல்விக்குப் பிரவேசிப்பதன் மூலம் சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். உயர்கல்வி உள்நாட்டு ரீதியில் அரசு மற்றும் தனியார் துறை ஊடாகவும் வெளிநாட்டிலும் பெற்றுக்கொள்ள முடியும். உள்நாட்டில் உயர்கல்விக்குப் பிரவேசிக்கும் போது உயர்தரப் பரீட்சையில் தோற்றிய பாடவிதானங்கள் மிக முக்கியமாகும். இதனடிப்படையில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளின் மூலம் உயர்தரம் சுற்ற மாணவர்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு உயர் கல்வியில் பிரவேசிப்பதற்கு இயலுமை உள்ளது. (இலங்கை பல்கலைக்கழகங்கள் மூலம்):

தொடரும்...



# இளம் தளிர்

தெய்வம் தந்த தங்க தாரகையே
தேடியும் கிடைக்காத பொக்கிச மங்கையே
வளர் பிறை நாளில் வந்த வண்ணமே
வாழ் நாள் முழுவதும் என் எண்ணமே

புன்னகை பூத்த புதுமை நாளில்
இருள் அகற்றிய ஒளி நீயே
மழலைக் குரலில் இசை மலர்ந்து
மனம் மழையில் மகிழ்ச்சி சிதறியது

கை பற்றிய நிமிடமே போதும்
உலகம் எனக்கே எனத் தோன்றும்
தாயின் இதயத்தே பதிந்திடும்
தங்கம் போல் மின்னிய தேவதையே

கருங் கூந்தல் பூத்துக் குலுங்கும் - என்
அழகியே
உன் வண்ணங்களில் இல்லை அழகு
உன் எண்ணங்களில் மட்டுமே அழகு
என் அறியா விழிப்பை விட உன்
அறிதுயில் மேலானது சிற்பமே

கோ.நித்தியா



# தாய்மை

அகரம் இன்றில் அகராதி கூட
பொருளற்றதுதான்.
அன்னை இன்றில் அன்பு கூட
பொருளற்றதுதான்.

வார்த்தையில் அடங்கா காவியம்
வர்ணத்தில் நிறைய ஒவியம்
வாழ்க்கையின் அர்த்தம்
புரியவைத்தவள்(வைப்பவள்)

நித்தம் நித்தம் பல போராட்டங்கள்
சேயின் முத்தத்தினால் சிதறடிக்கப்படும்
அவளின் வலிகள்
அவளுக்கு அது ஒரு பொருட்டல்ல

தன்னுயிரையே துச்சம்
என்று எண்ணி உயிர் கொடுப்பாள்
தன் பிள்ளைக்காக உலகையே
எதிர்க்கும் ஆற்றல் படைத்தவள்.

அன்னையர் தினத்தில்
பேருந்து விபத்தில்
உயிர்கொடுத்து தன் மழலை
உயிர் காத்த
தாய்மைக்கு சமர்ப்பணம்.

சீதா வாசன்
சது/கமு ராணமடு இந்துக் கல்லூரி

නාවෙළි NAAVELI நாவெளி
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி
moha.divi.navithanveli@gmail.com
ஞாயிற்றுக்கிழமை / மலர் - 17 / இதழ் - 37 / 25 வைகாசி 2025



பாலசிங்கம் சஜிந்ரன், பாண்டிருப்பு

# அரச அலுவலகங்களில் வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடலின் வகிபாகம்

தொடர்பாடலானது மிக நன்றாகச் செயற்படும் எந்தவொரு அமைப்பினதும் அடிப்படைக் குணாம்சம் ஆகும். மேலும் இது குறிப்பாக அரச அலுவலகங்களைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமும் ஆகும். அரச அலுவலகங்களில் அரசினால் உருவாக்கப்பட்ட கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டு பொது நலனுக்கான சேவை வழங்கப்படுகின்றது. அரச அலுவலகங்களில் தொடர்பாடலானது ஒரு அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இடையேயும், பிற அலுவலகங்களுடனும் மிக முக்கியமாக பொதுமக்களுடனும் பரந்த அளவிலான தொடர்புகளைக் கொண்டிருப்பதை உள்ளடக்கியது. தொடர்பாடலில் அரசின் புதிய கொள்கைகளை உத்தியோகத்தர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவது அலுவலகத்தின் உள் பணிகளை ஒருங்கிணைப்பது குடிமக்களின் கோரிக்கைகளைக் கையாள்வது போன்ற பல விடயங்கள் அடங்கும். வலுவான தொடர்பாடல் அமைப்புகள் தெளிவு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல் மற்றும் நம்பிக்கையை உறுதி செய்கின்றன.

## அரச அலுவலகங்களில் தொடர்பாடலின் முக்கியத்துவம்

குடிமக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் வழிநடாத்தும் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்துவதற்கு அரச அலுவலகங்கள் பொறுப்பாய் அமைகின்றன. இந்த மகத்தான பொறுப்பு உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் உயர் மட்டத் தெளிவு மற்றும் ஒருங்கிணைப்பை வேண்டி நிற்கின்றது. ஊழியர்கள் முதல் பொதுமக்கள் வரை அனைத்து பங்குதாரர்களும் அரசாங்கத்தின் குறிக்கோள்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து தெளிவான விளக்கத்தைப் பெற்றிருப்பதை வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல் உறுதி செய்கிறது.

அரச அலுவலகங்களில் தொடர்பாடல் மிக முக்கியமான விடயங்களுள் ஒன்றாய் இருப்பதற்கு அந்த நிறுவனங்களின் சிக்கலான தன்மை மற்றும் அளவும் காரணங்களாய் அமைகின்றன. பெரும்பாலும் இலாபத்தில் கவனம் செலுத்தும் தனியார் நிறுவனங்களைப் போலல்லாமல் சட்ட அமுலாக்கம், பொதுச் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் பொருளாதாரக் கொள்கை உள்ளிட்ட பரந்த அளவிலான சேவைகளை அரச அமைப்புகள் கையாளுகின்றன. அரச அலுவலகங்களுக்கு இடையேயான திறமையான தொடர்பாடலும் ஒருங்கிணைவும் இந்த சேவைகள் திறம்பட வழங்கப்படுவதையும் வளங்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கின்றன.

## உள்வாரியான தொடர்பாடல்: ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்

அரச துறைகளுக்குள் திறன்வாய்ந்த உள்ளகத் தொடர்பாடல் செம்மையான பணிப்பாய்ச்சலைப் பேணுவதிலும், உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. உயர் அதிகாரிகள், இடைநிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கிளைகள் மற்றும் நிருவாகப் பிரிவுகளுக்கு இடையேயான தெளிவான தொடர்பாடல் தவறான புரிதல்களைத் தடுக்கவும், பணி முயற்சிகள் இரட்டிப்பாதலைக் குறைக்கவும், பணிகள் சரியான நேரத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு புதிய சுகாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டால், சுகாதாரத் துறை, நிதி அமைச்சு மற்றும் உள்ளூர் நிருவாகப் பிரிவுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியம். இந்தத் துறைகள் திறம்பட தொடர்பு கொள்ளத் தவறினால், அந்தக் கொள்கை வினைத்திறன் மற்றும் விளைதிறன் வாய்ந்த முறையில் செயற்படுத்தப்படாமல் போகலாம், இது பொதுமக்களின் அதிருப்தி மற்றும் வள விரயத்திற்கு வழிவகுக்கும்.

மேலும், தெளிவான அறிவுறுத்தல்கள் மற்றும் சரியான நேரத்தில் செய்யப்படும் இற்றைப்படுத்தல் என்பன அரச ஊழியர்கள் அரசின் கொள்கைகள் அமுலாக்கப்படுவதில் தங்கள் பங்கு, பொறுப்புகள் மற்றும் தங்கள் மீதான எதிர்பார்ப்புகள் எவையென்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பயனுள்ள உள்வாரியான தொடர்பாடல் ஆரோக்கியமான பணிச்சூழலையும் வளர்க்கிறது. ஊழியர்களின் மன உறுதியை அதிகரிக்கிறது. அத்துடன் ஊழியர்களின் ஈடுபாட்டையும் பொறுப்புணர்வையும் மேம்படுத்துகிறது.

### வெளிவாரியான தொடர்பாடல்: பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையை கட்டியெழுப்புதல்.

அரசாங்கங்கள் தங்கள் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளன. ஜனநாயக அமைப்புகளில் பொது நம்பிக்கை அவசியம். மேலும் அது வெளிப்படையான, நிலையான மற்றும் பதிலளிக்கக்கூடிய தகவல் தொடர்பாடல் மூலம் மட்டுமே கட்டமைக்கப்பட முடியும். அரச அலுவலகங்கள் அரசினால் வழங்கப்படும் கொள்கைகள் தீர்மானங்கள் மற்றும் மாற்றங்களைப் பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கும்போது அது சட்டபூர்வமான தன்மையை மேம்படுத்துவதுடன் குடிமைப் பங்கேற்பையும் ஊக்குவிக்கிறது.

உதாரணமாக, இயற்கைப் பேரழிவு அல்லது தொற்றுநோய் போன்ற நெருக்கடியின் போது துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களைப் பரப்பும் அரசாங்க அலுவலகங்களின் திறன் உண்மையில் அநேக பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றும். இதுபோன்ற சூழ்நிலைகளில் தவறான தகவல் அல்லது தெளிவற்ற செய்தி அனுப்புவது குழப்பம், பீதி மற்றும் பாதுகாப்பின்மை போன்ற சூழ்நிலைகளுக்கு வழிநடாத்தும்.

இன்றைய மின்னனு (Digital) யுகத்தில் அரசாங்கத் தொடர்பு அலைவரிசைகள் பாரம்பரிய ஊடகங்களுக்கு அப்பால் இணைய வலைத்தளங்கள், சமூக ஊடக தளங்கள் மற்றும் திறன்பேசிச் செயலிகள் வரை பல வழிமுறைகளைப் பயன்படுத்தி வெளிவாரித் தொடர்பாடலை சிறப்பாக மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன. இவ்வாறான தளங்கள் மூலம் அரச அலுவலகங்கள் குடிமக்களுடன் நேரடி ஊடாட்டத்தை இலகுவாக மேற்கொள்ள முடியும். சரியான முறையில் தகவலறிந்த பொதுமக்கள் சிறப்பாக முடிவுகளை எடுக்கவும், அரச நிருவாகத்தில் பங்கேற்கவும், அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைக்கவும் சிறப்பாகத் தயாராய் இருப்பர்.

### தொடர்பாடல் மற்றும் கொள்கை அமுலாக்கம்.

அரசின் கொள்கை ஒன்றின் வெற்றி, அதன் உருவாக்கத்தை மட்டும் சார்ந்தது அல்ல, மாறாக

அதை செயல்படுத்துபவர்கள் மற்றும் பயனாளிகள் ஆகிய இருசாராரும் எவ்வளவு தூரம் அதனைப் புரிந்துகொண்டு செயற்படுகின்றார்கள் என்பதையும் பொறுத்ததாகும். மோசமான தொடர்பாடல் கொள்கை முன்முயற்சியின் தவறான விளக்கம், எதிர்ப்பு அல்லது முழுமையான தோல்விக்கு வழிவகுக்கும்.

உதாரணமாக, போதுமான பொது விழிப்புணர்வு மற்றும் விளக்கம் இல்லாமல் ஒரு புதிய வரிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டால் குடிமக்கள் அதைச் சுமையாக உணரலாம் அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கலாம். மறுபுறம், அதே கொள்கை அதன் நோக்கங்கள், நன்மைகள் மற்றும் நடைமுறைகளைக் கோடிட்டுக் காட்டும் தெளிவான தகவல் தொடர்புடன் இருந்தால், பொதுமக்களின் ஏற்றுக்கொள்ளல் மிக அதிகமாக இருக்கும்.

எனவே, திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் பின்னூட்டல் கட்டங்கள் உட்பட, கொள்கை உருவாக்கும் செயல்பாட்டில் தகவல் தொடர்பாடல் ஆரம்பத்தில் இருந்தே ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

## அரச அலுவலகங்களில் சிறப்பான தொடர்பாடலை மேற்கொள்வதில் உள்ள சவால்கள்.

அரச அலுவலகங்களில் சிறப்பான தொடர்பாடல் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்ற போதிலும், அங்கு பயனுள்ள தொடர்பாடல் பல சவால்களை எதிர்கொள்கிறது. ஒரு பொதுவான பிரச்சினை அதிகாரத்துவ அமைப்பின் குணாம்சமாக விளங்கும் சிவப்பு நாடா முறைமை ஆகும். இது தகவல் ஓட்டத்தை மெதுவாக்குவதுடன், பதிலளிக்கும் தன்மையையும் குறைக்கும். அரச அலுவலகங்கள் பெரும்பாலும் படிநிலை கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன. அக்கட்டமைப்புகள் தொடர்பாடல் குழிகளை உருவாக்கி சரியான நேரத்திற்கு இடம்பெற வேண்டிய தகவல் பரிமாற்றத்தைத் தடுக்கின்றன.



மேலும், மொழித் தடைகள், அரச ஊழியர்களிடையே தகவல் தொடர்பாடல் திறன் இல்லாமை மற்றும் நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் போதுமான பயன்பாடு அரச அலுவலகங்களில் இல்லாதிருத்தல் ஆகியவை பயனுள்ள தகவல் தொடர்புக்கு இடையூறாக இருக்கலாம். மேலும், சில சந்தர்ப்பங்களில் அரசியல் செல்வாக்குகளும் கூட தகவல்களைக் கையாளுதலிலும் தகவல் பாய்ச்சலைத் தணிப்பதிலும் பங்களிக்கலாம். இது அரசின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

இந்த சவால்களைச் சமாளிக்க சிறந்த தொடர்பாடல் பயிற்சி, நவீன தகவல் தொடர்பு கருவிகளை பாவனைக்கு ஏற்றுக்கொள்வது கருத்து சுழற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் திறந்த தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை கலாசாரத்தை வளர்ப்பதில் அரசின் அதிகரித்த முதலீடு தேவைப்படுகிறது.

## தொடர்பாடலை மேம்படுத்துவதில் தொழில் நுட்பத்தின் பங்கு

அரச அலுவலகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்பாடலை மேம்படுத்து வதில் தொழில்நுட்பம் அளப்பரிய முறையில் பங்கு வகிக்கிறது. மின்-ஆளுமைத் தளங்கள்,




மின்னஞ்சல்கள், காணொளி கூட்டங்கள் மற்றும் மேகக் கணிமை (Cloud Computing) அடிப்படையிலான திட்ட முகாமைத்துவக் கருவிகள் தகவல் பகிரப்பட்டு செயலாக்கப்படும் விதத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இந்த கருவிகள் தகவல் தொடர்பை விரைவுபடுத்துவது மட்டுமல்லாமல் பொறுப்புக்கூறல் மற்றும் எதிர்காலக் குறிப்புக்காக பதிவுகள் பராமரிக்கப்படுவதையும் உறுதி செய்கின்றன.

எடுத்துக்காட்டாக, உள்வாரியான இணைய வலை வாசல்கள் அரசு ஊழியர்கள் தமது பணி தொடர்பான புதுப்பிப்புகளை இலகுவாக அணுகவும், ஆவணங்களைப் பகிரவும், வெவ்வேறு துறைகளுக்கு இடையே நிகழ்நேரத்தில் ஒத்துழைக்கவும் அனுமதிக்கின்றன. வெளிவாரியாக, அரச வலைத்தளங்கள் மற்றும் செயலிகள் குடிமக்களுக்கு புகார்களையும் தேவைகளையும் பதிவு செய்யவும் கருத்துகளை வழங்கவும் சேவைகள் தொடர்பான தகவல் தளங்களை எளிதாக அணுகவும் உதவுகின்றன.

செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு முறைமைகள் அரச அமைப்புகள் தகவல் தொடர்பு முறைகளை பகுப்பாய்வு செய்யவும், அதிகபட்ச விளைவைப் பெறுவதற்காக தரவுகளைக் கொண்டு கருத்துருவாக்கங்களை வடிவமைக்கவும் உதவுகின்றன.

அரச அலுவலகங்களில் திறன்வாய்ந்த தொடர்பாடல் என்பது வெறும் செயற்பாட்டுத் தேவை மட்டுமல்ல. அது ஒரு தார்மீகக் கடமையுமாகும். இது ஜனநாயக செயல்முறையை ஆதரிப்பதுடன் திறமையான கொள்கை செயற்படுத்தலை உறுதியும் செய்கிறது. மேலும் சிறப்பான தொடர்பாடல் அரசின் வெவ்வேறு துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன் அரசாங்கத்திற்கும் அது சேவை செய்யும் குடிமக்களுக்கும் இடையே நம்பிக்கையின் பாலத்தையும் உருவாக்குகிறது. உலகில் நாடுகள் மேலும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாக மாறி மக்களின் பிரச்சினைகளும் மிகவும் சிக்கலானதாக மாறும்போது தெளிவானதும், சரியான நேரத்தில் அமைவதும் வெளிப்படையானதுமான தொடர்பாடலுக்கான தேவையும் அதிகரிக்கும்.

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அரச நிறுவனங்கள் திறந்த தொடர்புக் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அரச உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாட்டில் அதிக முதலீடு செய்வதுடன் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த அரச அலுவலகங்களைத் தூண்டவும் வேண்டும். அப்போதுதான் பொதுமக்களுக்கு திறம்படவும் ஒப்புரவாகவும் நேர்மையுடனும் சேவையாற்ற அரசாங்கங்கள் தமக்கு வழங்கப் பட்டுள்ள மக்கள் ஆணையை நிறைவேற்ற முடியும்.



# தலை கூட தப்புமா?

நடக்கப்போகிறது "Brain Bridge" எனும் மருத்துவ அதி நவீன தொழில்நுட்ப முறையில் தலை மாற்று அறுவைச் சிகிச்சை. மூளைச்சாவு அடைந்த இளையவர்களின் உடலில் அவரது தலையை நீக்கிவிட்டு வேறு உடம்பிலிருந்து தலையை எடுத்துப் பொருத்தி விடுவார்கள். மிக அதிகமான ரத்த நாளங்களையும் நரம்புகளையும் அதிவேகமாக அதே நேரம் மிக மிக துல்லியமாக இணைக்க வேண்டும் என்பதனால் செயற்கை நுண்ணறிவு முறையில் இயந்திர மருத்துவர்கள் இதை செய்திட முடியுமாம்.

சிறுநீரகம், இதயம், நுரையீரல் போன்று இப்போது மொத்தமாக தலையையே மாற்றும் சிகிச்சை வரப்போகிறது. இனி உடல் தான பட்டியலில் தலையும் இடம் பிடிக்கப்போகிறதாம்.



# அன்னாசி சுடுநீர் அருந்துங்கள்.

அன்னாசி சுடுநீர் உங்களைக் காப்பாற்றும். ஒரு கப் வெந்நீரில் 2-3 நறுக்கிய அன்னாசிப்பழம் சேர்த்து தினமும் குடித்துவர புற்றுநோய் செல்கள் அழிந்துவிடும். சூடான அன்னாசி புற்றுநோய் எதிர்ப்புப் பொருள்களை வெளியிடுகிறது. இது பயனுள்ள புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவத்தின் சமீபத்திய முன்னேற்றம். சூடான அன்னாசிப்பழத்திற்கு நீர்க்கட்டிகள் மற்றும் கட்டிகளை அகற்றும் திறன் உள்ளது. இது அனைத்து வகையான புற்றுநோய்களுக்கும் சிகிச்சையளிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அன்னாசிப்பழ வெந்நீர் ஒவ்வாமை அல்லது அலர்ஜி காரணமாக உடலில் உள்ள அனைத்து கிருமிகளையும் நச்சுக்களையும் நீக்குகிறது.



# மாத்திரைகளுக்கு தண்ணீரா? அல்லது மென்பானங்களா? சிறந்தது

நமது வாழ்க்கைப் பாதையைக் கடக்கும் போது சாதாரண தலைவலியில் இருந்து பல பாரிய நோய்கள் வரை கடந்து செல்ல வேண்டியுள்ளது. இந் நேரங்களில் நோய் நிவாரணிகளாக மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலைகள் உருவாகின்றன. அவ்வாறு மாத்திரைகளை விழுங்கும்போது தண்ணீரை மாத்திரம் பயன்படுத்துவதே சிறந்த முறையாகும்.

அதனைத் தவிர்த்து வேறு பானங்களை பயன்படுத்தி மாத்திரைகளை விழுங்கினால் சில மாத்திரைகளின் பலன் குறையும். சூடான பானங்கள் மாத்திரைகளை விழுங்க பயன்படுத்துவது நல்லதல்ல. சூடான பானங்களுடன் மாத்திரைகளை விழுங்கும்போது மாத்திரையின் மேல் பகுதி விரைவாகவே உருகிவிடும். வயிற்றைச் சென்றடையும் முன்பே மாத்திரைகள் உருகினால் வயிற்றுவலி தோன்றக்கூடும். ஒரேஞ்ச் பழங்களுடன் மாத்தரை விழுங்கினால் சில வேளைகளில் மாத்திரையின் சக்தி குறைந்து போகும். அதற்குக் காரணம் பழச்சாறில் இருக்கும் அமிலத்தன்மை. பாலோடு மாத்திரை விழுங்குவதும் நல்லதல்ல. அஸ்பிரின் இருமல் மருந்து, அன்டிபயாட்டிக்குகள் பாலோடு சாப்பிட்டால் முழுமையான பலனைத் தராது என்பதும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே சுத்தமான தண்ணீரையே மாத்திரைகளை விழுங்க பயன்படுத்துவோம்.

கி.யோகலிங்கம்,
பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

R.Rupiga
Development Officer




சமையல் என்பது உணவைத் தயாரிக்கும் கலை இது பொருட்களை வெட்டுதல், கலத்தல், வேகவைத்தல், வறுத்தல், பொரித்தல் போன்ற பல்வேறு முறைகளை உள்ளடக்கியது. சமையல் மூலம் உணவு சுவையாகவும், பாதுகாப்பாகவும், ஊட்டச்சத்து நிறைந்ததாகவும் மாறுகிறது. இது கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் தனிப்பட்ட படைப்பாற்றலுடன் தொடர்புடையது.

சமையல் கலை என்பது உணவைத் தயாரிப்பதில் உள்ள படைப்பாற்றல், திறன் மற்றும் அழகியலை உள்ளடக்கிய ஒரு கலை வடிவமாகும். இது பொருட்களைத் தேர்ந்தெடுப்பது, சுவைகளை இணைப்பது, வண்ணங்கள் மற்றும் அமைப்புகளை சமநிலைப்படுத்துவது, உணவை கவர்ச்சிகரமாக வழங்குவது ஆகியவற்றை உள்ளடக்கியது. சமையல் கலை ஒரு கலாசாரத்தின் பாரம்பரியத்தையும், தனிநபரின் கற்பனைத்திறனையும் பிரதிபலிக்கிறது. இது உணவை வெறும் தேவையாக மட்டுமல்லாமல், ஒரு அனுபவமாகவும், உணர்வுகளைத் தூண்டும் படைப்பாகவும் மாற்றுகிறது. சமையல் கலைத்திறனுடனும், கவனத்துடனும், ஆரோக்கியத்தையும் சுவையையும் மையப்படுத்தி இருக்க வேண்டும்.

## தேவையான பொருள்கள்

மட்டன் - 1/2
மஞ்சள் தூள் - 1/4 ஸ்பூன்
சீரகத் தூள் - 1 ஸ்பூன்
சோம்பூத் தூள் - 1 ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 3 ஸ்பூன்
தயிர் - 4 ஸ்பூன்
இஞ்சி, பூண்டு விழுது - 2 ஸ்பூன்
பட்டை - 1
கிராம்பு - 2
வெங்காயம் - 2
பச்சை மிளகாய் - 2
கொத்தமல்லி தழை - சிறிதளவு
உப்பு - போதுமான அளவு
எண்ணெய் - தேவையான அளவு



மட்டன் தொக்கு சமைப்பதற்கு முதலில் மட்டன், மஞ்சள் தூள், தயிர் ஆகியவற்றுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து 1 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கியும், பச்சை மிளகாயை இரண்டாகக் கீறியும் வைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு பிரஸர் குக்கரை வைத்து எண்ணெய்யை ஊற்றி சூடானதும், அதில் பட்டை மற்றும் கிராம்பு போட்டு, பட்டை பொன்னிறமானதும், அதில் நறுக்கி வைத்த வெங்காயம், பச்சை மிளகாயை சேர்த்து வதக்க வேண்டும். வெங்காயம் பொன்னிறமாக வதங்கியதும், அதனுள் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்க வேண்டும்.

பிறகு மிளகாய்த் தூள், சீரக தூள், சோம்பூத் தூள் சேர்த்து வதக்க வேண்டும். அதனுடன் ஊற வைத்த மட்டன் சேர்த்து 15 - 20 நிமிடம் நன்றாக கிளறி அதனுடன் தேவையான அளவு உப்புசேர்த்து, நீர் சேர்க்காமல் பிரஸர் குக்கரை மூடி வைக்க வேண்டும். முதல் விசில் வந்ததும் அடுப்பை சிம்மில் வைத்து 1/2 மணி நேரம் மட்டன் வேகும் வரை கொதிக்க வைத்து கெட்டியான பதத்திற்கு வந்ததும், அதன் மேல் கொத்தமல்லி தழைத்தூவி இறக்கினால் சுவையான மட்டன் தொக்கு ரெடி.



# திருமதி. உஷாந்தினி ரணுஜன்

திருமதி. உஷாந்தினி ரணுஜன், 15/6, நாவிதன்வெளி-02 இனை முகவரியாகக் கொண்ட செல்லையா லோகநாதன் என்பவருக்கும் அம்பாரை தவசோதி தம்பதியினருக்கும் 1992ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி மகளாகப் பிறந்தார்.

பிறப்பிலேயே பார்வையை இழந்த இவர் தனது ஆறாவது வயதில் ஆரம்பப் பாடசாலைக்கு சென்றபோது பார்வையற்ற உங்களுக்கு எவ்வாறு கல்வி கற்பிப்பது என்ற வினாவை எழுப்பினார்கள். இது இவருக்கு மிகவும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தவே கதறி அழுது பாடசாலையை விட்டு வெளியேறியதாக எம்மிடம் மிகுந்த மனவருத்தத்துடன் கூறினார். என் இரு விழிகளும் இருண்டது போன்று என் கல்வியும் இருண்டு போய்விடுமோ என்று மனம் சோர்ந்து நின்றபோது பார்வையற்றவரும் படிப்பதற்கு ஓர் பாடசாலை உண்டு என அறிந்து தனது கல்விப்பயணத்தை தொடர்வதற்காக மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமா நகரில் உள்ள “தரிசனம்” என்ற விழிப்புணர்வற்றோர் பாடசாலையில் 2000ஆம் ஆண்டு முதல் சேர்ந்து அவரது கல்விப்பயணம் தொடர்கிறது.

அங்கு “பிறேயில்” (brail) எனப்படும் குற்று எழுத்து மூலமான கல்வியைச் செம்மையாகப் பயின்று 2001ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கல்வி முறை மூலம் 1996 ஆம் ஆண்டு சாதாரண மாணவர்களுடன் முதலாம் தரம் தொடக்கம் உயர்தரம் வரை மட்/விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தில் கற்றார்.

மேலும், இவர் கர்நாடக சங்கீதத்தை முறையாக முழக்கம் முருகப்பாவின் மருமகளான கோபிகா திலகம் எனும் திறமையான ஆசானிடம் கற்றார். உயர் தரத்தில் கூட கர்நாடக சங்கீதத்தை ஓர் பாடமாகக் கற்றுள்ளார். அதுமாத்திரமன்றி பாடல் போட்டிகள், தமிழ்த்தின போட்டிகள் போன்றவற்றில் பங்குபற்றி அவரது திறமையை வெளிப்படுத்தி பாடசாலைக்காலங்களில் சான்றிதழ்களையும் பெற்று திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளார். பாடல் போட்டிகள் மட்டுமல்லாது கலை நிகழ்வுகளான நாடகம், நடனம், பார்வையற்றவர்களுக்கான விளையாட்டுக்கள் போன்றவற்றிலும் பங்குபற்றி தன் திறமையை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

மேலும், இவர் மட்டக்களப்பு இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்ட பாடல் போட்டிகளில் பங்குபற்றி 2010, 2011, 2012ஆம் வருடங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அகில இலங்கை கொழும்பு தேசிய இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பாடல்போட்டியில் 2012ஆம் ஆண்டில் மூன்று சுற்றுக்கள் நடைபெற்று இறுதிச்சுற்றில் மூன்றாம் இடத்தினைப்பெற்று அவரது திறமையை வெளிப்படுத்தி சாதித்துள்ளார்.

மேலும் இவர் 2011ஆம் ஆண்டு சாதாரண தரத்தில் திறமையாக சித்தியடைந்து உயர்தரம் பயின்றார். 2014ஆம் வருடம் உயர் தரத்தில் சித்தி பெற்று கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 2019ஆம் ஆண்டு தனது பல்கலைக்கழக கல்வியை முடித்து கலைமாணிப்

பட்டத்தினைப் பெற்று 2021ஆம் அண்டு பட்டதாரிப் பயிலுனராக தேர்ந்தெடுக்கப்பட்டு 2022ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தராக நிரந்தர நியமனத்தினைப் பெற்று நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இக்காலப்பகுதியில் அலுவலக நிகழ்வுகள், கிழக்கு மாகாணம் தொடக்கம் வடமாகாணம் வரையிலும் உள்ள பல இசைமேடைகளில் பல இசைக்குழுக்களுடன் இணைந்து பாடி அசத்தியுள்ளார். அதுமாத்திரமன்றி பல ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் பாடியுள்ளார். இவர்பாடும் பண்ணிசை உருகாதவர்களையும் உருகவைக்கக் கூடியதாக இருப்பதை பலரும் அறிவர். இத்திறமை அவரை அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசை போதனாசிரியராக்கியது.



மேலும், இவர் 2016ஆம் ஆண்டு மட்டக்களப்பைச் சேர்ந்த றஞ்சன் றணுஜன் என்பவரை காதலித்து திருமணம் செய்து இன்று ஒரு குழந்தையுடன் மிகவும் மனமகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றார். இவரின் இசைப் பயணமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

மேலும் அவர் கூறுகையில், இன்றும் அன்றும் வெட்கம், கௌரவம் காரணமாக எல்லோரும் தங்களுடைய குறைகளை மறைத்ததோடு நிறைகளையும் மறைத்து இலைமறை காய்களாக வாழ்கின்றனர். இந்நிலை மாறி என்னைப் போன்று தங்களை மாற்றுத்திறனாளிகளாக உணராது ஓர் திறமைசாலிகளாக உணர்ந்து தங்கள் திறமைகளை வெளிக்கொணர எங்கு சென்று கற்க வேண்டுமோ அங்கு சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து என்னைப் போன்று அவர்களும் பிரகாசிக்க



வேண்டும் என்பது தனது ஆசை எனவும் கூறியதுடன் தான் கல்வி கற்ற நிறுவனத்திற்கும் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதாகவும் கூறினார்.

**நீங்கள் கற்ற கலையினை எதிர் கால சந்ததியினருக்கு எவ்வாறு பயன் படுத்தப்போகின்றீர்கள் ?**

தற்போது தனது வீட்டில் பாடசாலை மாணவர்களுக்கு பண்ணோடு பாடல்களை பாடுவதற்கு பயிற்று விப்பதாகவும் தான் கற்ற கலையினை தன்னுடைய காலத்திற்கு பின்னரும் அழியாது பாதுகாத்து சமூகத்திற்கு வழங்குவதற்காக தனது குழந்தைகளுக்கும் கற்பித்து வருவதாகவும் தெரிவித்தார்.

**உங்களுடைய கலைப்பயணத்தில் சவாலாக அமைந்த விடயம் எது?**

நான் சிறுபராயம் முதல் பார்வையற்று மனம் உடைந்து போய் இருந்தேன் இதிலிருந்து விடுபட்டு சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்பதுதான் எனது இலட்சியம் என்றார்.

இவரது ஆசைகள் நிறைவேறி கலைப் பயணம் தொடர "நாவெளி" படலையைத் தேடி குழுவினர் சார்பில் வாழ்த்துகின்றோம்.

ஏ.எல்.எம்.ஷினாஸ், கே.நிலேந்திரன்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி